4058

செந்தமிழ்

தொகுதி - 75 டிசம்பர் 1981 பகுதி - 4

மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்தும்

தமிழ் இலக்கிய இதழ்

ஆசிரியர்: டி. பி. எம். பெரியசுவாமி

செந்தமிழ்

தொகுதி - 75 டிசம்பர் 1981 பகுதி - 4

உள்ளுரை

எண்	பொருள்	பக்கம்
1	பாண்டித்துரைத் தேவரும் இசை விழாவும்	378
2.	கவிராஜ பண்டித ஆர். எஸ். இராம சுப்பிரமணிய நாவலர்	382
3.	இராமாயணக் கும்மி — ச. சுபாஷ் சந்திரபோஸ்	384
4	தமிழறிஞர் மறைவு	394
5	அருட்பொருள் அகவல் — கவிராச பண்டித இராமசுப்பிரமணிய நாவலர்	395
6.	இலக்கியத் திறனாய்வு ஓர் அறிமுகம் — டாக்டர். வை. சச்சிதானந்தன், M.A. M Litt. Ph.D..	401
7.	சிலம்பின் பாவிகம் — நெல்லை. ந சொக்கலிங்கம். எம். ஏ., டி.ஜி.டி.	410
8.	நீத்தார் நினைவுக்கு அஞ்சலி	420
9	ஆசிரியர் பக்கம்	422
10.	கவியரசர் கண்ணதாசன் — கவிஞர் இல. வாசுகிநாதன்	423
11.	திருமுறை வழிபாட்டு நிறைவு விழா	426

பாண்டித்துரைத் தேவரும் இசை விழாவும்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இசைக் கல்லூரியின் தலைவராக விளங்கிய வி. எஸ். கோமதி சங்கர ஐயர் அவர்கள் நெல்லை மாவட்டத்தைச் சார்ந்தவர். அவருடைய தந்தையார் பல்லவி சுப்பையா பாகவதரும் இசைக்கலையில் வல்லுநராகத் திகழ்ந்தவர். சுப்பையா பாகவதர் 1876-ஆம் ஆண்டு முதல் 1882-ஆம் ஆண்டு வரை குருகுலவாசம் செய்து இசைபயின்றவர். இசைக்கலையில் இவருக்கு ஆசானாகத் திகழ்ந்த மகா வைத்தியநாத சிவன் தஞ்சை மாவட்டம் வையச்சேரி எனும் கிராமத்தில் வாழ்ந்தவர். சேதுபதி மன்னர்களிடம் சிறப்புப் பட்டமும், பரிசுகளும் பெற்ற பெருமை இவருக்கு உண்டு. சுப்பையா பாகவதர் எழுதி வைத்திருந்த குறிப்புகளின் துணை கொண்டு, கோமதிசங்கர அய்யர் எழுதிய நூல் "இசை உலகில் மகா வைத்தியநாத சிவன்" என்பதாகும். அந்நூலின் இரண்டாம் பாகத்திலிருந்து ஒரு பகுதி இக்கட்டுரையாக வெளியிடப்படுகிறது.

— ஆசிரியர்

"பாலவனத்தம் ஜமீன்தாராகிய பாண்டித்துரைத் தேவரவர்களுக்கு இருபத்திரண்டு அல்லது இருபத்திமூன்றாவது வயது நடந்து கொண்டிருந்தது. அவர் இசையைச் செம்மையுற வளர்த்த வள்ளலாவார். தமிழறிவோடு இசையறிவிலும் நல்ல திறமுடையவராயிருந்தார். இசையில் வரும் திட்ட நுட்பங்களை அறிந்து மகிழ்பவர். அவர் ஒரு சமயம் இசைப்புலவர்கள் பலரை ஒன்றுசேர்த்து ஓர் அவை நிறுவி இசையிலுள்ள நுட்பங்களையெல்லாம் ஆராய்ந்து உலகோர் அறியும்படிச் செய்தல் வேண்டுமென்று எண்ணினார். அதன்படி (1888-ஆம் ஆண்டாக இருக்கலாம்) பல இசைப் புலவர்களையும் வரவழைத்து ஒரு இசையரங்கம் நடத்தி விழாவாகச் சிறக்கச் செய்தார். இதுவே தமிழகத்தில் முதன் முதலாகக் கூட்டிய ஓர் இசை அவையாகும். அந்த இசை விழாவானது ஏழு நாட்கள் தொடர்ந்து நடந்தது.

அந்த அவை பொலிவுற்று விளங்கும் வகையில் எழுபத்திரண்டு வயதுள்ள குன்னக்குடி கிருஷ்ணையர், நாற்பத்தாறு வயதுள்ள நெய்க்காரப்பட்டி பல்லவி சேஷய்யர், நாற்பத்து நான்கு வயதுள்ள மகா வைத்தியநாத சிவன், நாற்பத்து மூன்று வயதுள்ள பட்டினம் சுப்பிரமணிய ஐயர், மற்றும் புல்லாங்குழல் சரப சாஸ்திரிகள், பிடில் நாராயணசாமி ஐயர், பிடில் வெங்கோபராவ், திருக்கோடிக் காவல் பிடில் கிருஷ்ணையர், மாயூரம் வீணை வைத்தியநாத ஐயர், மிருதங்கம் நாராயணசாமியப்பா, மிருதங்கம் சாமாராவ் மிருதங்கம் துக்காராம், கடம் நாராயணசாமி ஐயர் ஆகிய இசை மகாமேதைகள் அமர்ந்திருந்தார்கள். இன்னும் பல இசைப்புலவர்களும் நாதசுர வித்துவான்களும் கூடிக் குழுமியிருந்தனர்.

அந்த இசை விழாவிலே பாண்டித்துரைத் தேவர் வீற்றிருக்க, இசை பற்றிய செய்திகளை வித்துவான்கள் ஒருவருக்கொருவர் உரையாடி வந்தார்கள். இசைபற்றிய நுட்பமான பல செய்திகளையும் ஒருவருக்கொருவர் அறிந்து வியத்தற்கு அவ்விழாவானது ஒரு வாய்ப்பளித்தது. ஒவ்வொரு நாளும் ஒரு இசைப் புலவரின் இசை நிகழ்ச்சி நடந்து வந்தது பாண்டித்துரைத் தேவரின் கருத்துக்கிணங்க அந்த அவையிலே ஒவ்வொரு வித்துவானும் புதிதான ஒரு தாளத்திலே பல்லவி அமைத்து நிரவல் சுரம் பாடி வந்தார்கள்.

முதல்நாள் குன்னக்குடி கிருஷ்ணையர் பாடினார். அவர் சாப்பி இராகத்தை ஆலாபித்து தானம் பாடியபிறகு "மால் மருகரிங்கே வருவாரடி மாமேரு பாண்டித் துரைசாமி உய்ய" என்ற ஒரு பல்லவிக்குரிய சொற்களைக் கைக் கொண்டார். அவர் வயதில் மூத்தவர்; முதியவர். இசையில் நற்றிறம் வாய்ந்தவர். இராமநாதபுரத்துச் சமத்தானத்துத் தலைமை பெற்ற ஆதீனவித்துவான். அவர்தம் கற்பனையில் பதினொரு அட்சரமடங்கிய ஒரு தாளத்தை உருவாக்கிக் கொண்டார். அத்தாளத்தைத் திச்ரசாய்ப்பும் கண்ட சாய்ப்பும் வருவதுபோல அமைத்துக்கொண்டார். திச்ரசாய்ப்பு என்பது (ரூபகம்)ஆறு மாத்திரைக் கால அளவும். கண்டசாய்ப்பு என்பது (சம்பை) ஐந்து மாத்திரைக் கால அளவும், கொண்டதாகையால் (6+5=11) பதினொரு அட்சரகால மாத்திரைதாளமாயிற்று. இதனை "தக தக தக தக தகிட" என்ற அளவு வருவது போலத் தாளமிட்டுப் பல்லவி பாடினார்.

இரண்டாம் நாள் விழாவிலே பட்டினம் சுப்பிரமணிய ஐயருடைய இசை நிகழ்ச்சி நடந்தது. அவருடைய இசையிலே அக்காலத்து இசைப் புலவர்கள் எல்லோருக்கும் தனி மதிப்புண்டு. பாண்டித்துரைத் தேவருக்கு அவரிடத்தில் பெரு மதிப்பும் அவருடைய இசையில் நல்ல ஈடுபாடும் உண்டு. அவரிடத்தில் அலாதியான அன்புடையவராயிருந்தார். அன்று பட்டினம் சுப்பிரமணிய ஐயர் பல்லவிக்குரிய இராகமாக வேகடை இராகத்தை எடுத்துக் கையாண்டார். எல்லா இராகத்தினும் வேகடை இராகம் அவருடைய சொந்த சொத்து. அத்துணை அழகாய்ப் பாடுவார். அவருக்கு 'வேகடை பட்டினம் சுப்பிரமணிய ஐயர்' என்ற சிறப்புப் பெயரும் உண்டு. அவர் தனக்குக் கைவந்த அந்த வேகடை இராகத்தை நன்றாகப் பாடிப் பின்பு அதில் தாளத்தைப் பாடி வித்தரித்தார்.

மூன்றாம் நாள் இசை விழாவிலே நெய்க்காரப்பட்டி பல்லவி சேஷய்யரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. அவர் பல்லவி பாடுவதில் வெகு சமர்த்தர். அதன் காரணமாகவே அவர் பெயருக்கு முன்னால் பல்லவி சேஷய்யரென்று அழைக்கப் பெற்றார்.

நான்காம் நாள் நடந்த இசைவிழாவிலே இசையில் இமயச் சிகரம் என்று மதிக்கப்பெற்ற மகா வைத்தியநாத சிவன் அமுதகானம் செய்தார். அவருடைய இசையைப் பற்றி எடுத்துக் கூற வேண்டியதில்லை.

மகாவைத்தியநாத சிவனுடைய இன்னிசை வெள்ளத்திலே தம் மனத்தைப் பறி கொடுத்துப் பாண்டித்துரைத் தேவர் அமர்ந்திருந்தார். வெகு நேரம் வரை அவர் பாடியிருந்தும் அங்குள்ளோர் அனைவரும் இன்னும் சிறிது நேரம் பாட மாட்டார்களா என்று சாதகப் பட்சி போல் எதிர்நோக்கி இருந்தார்கள். மகா வைத்திய நாத சிவன் பாடிமுடித்ததும் அவரும், குன்னக்குடி கிருஷ்ணையர், பட்டினம் சுப்பிரமணிய ஐயர், பல்லவி சேஷய்யர் ஆகிய நால்வரிடமும் பாண்டித்துரைத் தேவர் அவர்கள் அளவளாவித் தம் மகிழ்ச்சியை அறிவித்தார்கள். மேலும் அந்நால்வருக்கும் கைகளுக்கு வீர சங்கிலி இட்டார்கள். வீர சங்கிலி பொன்னாலாகியது.

குன்னக்குடி கிருஷ்ணையருக்கு இட்ட வீரசங்கிலியின் முகப்பிலே வைரக்கல் ஒளிவீச பதிக்கப் பெற்றிருந்தது. பட்டினம்

சுப்பிரமணிய ஐயருக்கு இட்ட வீரசங்கிலியின் முகப்பிலே இருட்டில் தீபச்சுடர் தோன்றுவதுபோன்றதொரு மாணிக்கக்கல் பதிக்கப்பெற்றிருந்தது. பல்லவி சேஷய்யருக்கு இட்ட வீரசங்கிலியின் முகப்பிலே நல்ல ஒளிவீசும் நீலக்கல் பதிக்கப் பெற்றிருந்தது. மகாவைத்திய நாத சிவனுக்கு இட்ட வீரசங்கிலியின் முகப்பிலே தகதகாயமான ஒளிதரும் மரகதக் கல் பதிக்கப்பெற்றிருந்தது. அவ்வாறான வீரசங்கிலியின் முகப்பிலே வெவ்வேறான இரத்தினக்கல் பதித்திருந்ததை நோக்கும்போது அவ் வித்துவான்களுடைய இசைத்திறத்தின் தராதரத்தினைப் பாண்டித்துரைத் தேவர் நன்கறிந்து பாராட்டியது போல அவ்வீர சங்கிலிகள் அளிக்கப்பெற்றனவோ என்று எண்ணும்படி இருந்தது.

ஐந்தாம் நாள் இசைவிழாவிலே மாயூரம் வீணை வைத்தியநாத ஐயருடைய வீணைக் கச்சேரியும், ஆறாம் நாள் இசைவிழாவிலே சரபசாஸ்திரிகளுடைய புல்லாங்குழல் கச்சேரியும், ஏழாம் நாள் இசைவிழாவிலே நாதசுரக் கச்சேரியும் நடந்து சிறப்புற்றது. அவர்களும் தக்க பரிசில்களும் சன்மானங்களும் அடைந்தார்கள். இவ்விசை விழா போன்று அதுவரை எங்கும் எவராலும் நடத்தப் பெற்றதில்லை என்ற சிறப்புத் தோன்றப் பாண்டித்துரைத் தேவரவர்கள் நடத்திப் பெருமையடைந்தார்கள். அதன் பின்பு பாண்டித்துரைத்தேவரவர்கள் தமக்கு ஓய்வு கிடைக்கும்போதெல்லாம் நான்கு அல்லது ஐந்து இசைப் புலவர்களை அவ்வப்போது வரவழைத்து இசை நிகழ்ச்சிகள் ஏற்படுத்தியும் இசை பற்றிய ஆராய்ச்சியனை அவர்களைக் கொண்டு செய்வித்தும் வந்தார்கள். பாண்டித்துரைத் தேவரவர்கள் இசைக்கு அத்துணைச் சிறப்பு கொடுத்து அக்கலையைப் பல இசைக் கலைஞர்களைக் கொண்டு ஆராய்ந்து வளர்த்து வந்ததுடன், அக்காலத்து முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் ஆகிய மூன்று தமிழ்ச்சங்கமும் தமிழ் மொழிக் கலையைத் திறம்பட வளர்த்து வந்தது போல 1901 ஆம் ஆண்டில் மதுரையிலே நான்காவது தமிழ்ச் சங்கம் ஒன்றைத் தோற்றுவித்துத் தமிழ்க்கலையை வளர்த்தார்கள். அக்காலம் கலைகளை வளர்த்த வள்ளல் போல பாண்டித்துரைத் தேவரும் கலை வளர்த்த செம்மல் என்ற புகழைப் பெற்றார். அவர் தாம் வாழ்ந்த 1911 ஆம் ஆண்டுவரை நம் நாட்டுக் கலை வளர்ச்சிக்கே பாடுபட்டுச் சிறந்தார்.

கவிராஜ பண்டித
ஆர். எஸ். இராம சுப்பிரமணிய நாவலர்

குமரி மாவட்டம், இராஜாக்க மங்கலம் எனும் ஊரில் 1906 ம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் சிவதாணு பிள்ளை - நாராயண அம்மாள் தம்பதியருக்கு இராமசுப்பிரமணியம் இளைய புதல்வனாகப் பிறந்தார். அப்போதைய குமரி மாவட்டம் கேரளத்தோடு இணைந்திருந்தமை-யால், தம் பள்ளிப்படிப்பை மலையாளத்திலே பயின்று மலையாளத்-தில் இவர் வித்துவான் ஆனார். ஆயினும் தாய் மொழியின்பால் கொண்ட ஆர்வத்தினால் தமிழை நன்கு கற்றுணர்ந்து புலமை பெற்றார். மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் உறுப்பினருமாயினார். வட-மொழிப் புலமை தமிழை - அதன் தனித்தன்மையை நன்குணர-இன்றியமையாதது என எண்ணி தமிழ் முதறிஞர் ரா. ராகவையங்கார் அவர்களை அணுகி அவர்களிடம் வடமொழியும் ஆழ்ந்து கற்றார். தம் இளம் வயதிலேயே 'செந்தமிழ் நிலையம்' என்ற பதிப்பகம் ஒன்றை நாகர்கோவிலில் நிறுவி அதன் வாயிலாக "தமிழ் விளக்கு" என்ற திங்கள் இதழையும் சில காலம் நடத்தி வந்தார். அவர் செந்தமிழ், தமிழ்ப்பொழில், ஆனந்த போதினி போன்ற இலக்கிய இதழ்களில் தம் இலக்கியப் படைப்புக்களை வெளியிட்டு வந்தார் அன்னாரின் புலமை கண்டு தமிழ்ச்சங்க உறுப்பினர்கள் 'நாவலர்' பட்டம் வழங்கிச் சிறப்பித்தனர்.

தம் 28-ஆவது வயதில் அரசாங்க உயர்நிலைப் பள்ளியில் தமிழ்ப் பண்டிதராகப் பணியாற்றத் தொடங்கி, 1962 வரை ஆசிரியப்பணி புரிந்தார். 1958ஆம் ஆண்டு மயிலை இராமகிருஷ்ண மடத்தினரின் வேண்டுகோளுக்கிணங்க, 2439 விருத்தப் பாக்களால் இராமகிருஷ்ண பரமஹம்சரின் வாழ்க்கை வரலாற்றினை "ராமகிருஷ்ண தேவரின் திவ்ய சரிதப்பாடல்" எனும் கவிதை நூலாக இயற்றினார். மயிலை இராமகிருஷ்ண மடத்தினர் நாவலர் அவர்களுக்கு கவிராச பண்டிதர் என்ற பட்டத்தை நல்கிச் சிறப்பித்தனர்.

ஹோமியோபதி, தமிழ் மருத்துவம் ஆகிய இரண்டையும் முறையாகப் பயின்றமையால், ஆங்கிலத்தில் ஹோமியோபதி வைத்திய நூல்களையும் தமிழ் மருத்துவம் பற்றித் 'தமிழ் மருத்துவ நூல்' என்ற நூலையும் எழுதியுள்ளார்.

ஐம்பதுக்கு மேற்பட்ட நூல்களை எழுதித் தமது செந்தமிழ் நிலையம் சார்பாக அவற்றை வெளியிட்டுள்ளார். அவர் எழுதிய 'தமிழ் மொழி வரலாறு' என்ற நூல் தமிழ் வித்துவான், தமிழ் இளங்கலை வகுப்புகளுக்குப்பாட நூலாகப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. நாவலர் அவர்களின் 'தமிழ் நிகண்டு என்ற நூல் தற்போது அச்சில் உள்ளது. தமிழ்ப்புலவோர்க்குப் பெரிதும் பயன்படும் அரியநூல் இது. தமது இறுதிக்காலம் வரை நாவலர் அவர்கள் மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடான செந்தமிழிலும், ஸ்ரீராமகிருஷ்ண விஜயத்திலும் தம் இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதிவந்தார். நாவலர் அவர்கள் இயற்கை எய்திய வியாழக்கிழமையன்று (29-10-81) அவர்பெயருக்குத் தபாலில் வந்த செந்தமிழ் இதழிலும் அவரது கட்டுரை வெளியிடப்பட்டிருந்தது. சில நாட்களாகவே நோய்வாய்ப்பட்டு இருந்த அவர் அன்றுமாலை 6 மணியளவில், தமது 76 - ஆம் வயதில் காலமானார். அவர் மனைவி பெயர் திருமதி. S.N. நாகலட்சுமி. அவர்களது ஒரே மகன், ஆர். எஸ் மோகனராஜன் தமிழில் எம்.ஏ. பட்டம் பெற்றவர். தற்போது திரைப்படத் துறையில் பணியாற்றி வருகிறார்.

நாவலரின் வாழ்க்கைக் குறிப்புகளை அனுப்பியவர்:

ஆர். எஸ். மோகனராஜன்
நாகர்கோவில்.

இராமாயணக் கும்மி

-ச. சுபாஷ் சந்திர போஸ்
ஆராய்ச்சி மாணவர், தமிழ்த்துறை
மதுரைப் பல்கலைக்கழகம்

இராம காதை பன்னெடுங்காலமாக பாமர மக்களிடையேயும் ஊடாடி வந்திருக்கின்ற மாபெரும் இலக்கியம். வடமொழியில் வால்மீகி எழுதிய இக்காப்பியத்தினை இத்தாலிய மொழியில் (1848) கார்ரெஸியோ என்பாரும், ஏறத்தாழ இதே காலத்தில் கிப்பாலிட்டே பவுச் என்பார் பிரெஞ்சு மொழியிலும், ரால்ப் கிரிபித் (1870) ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்துள்ளனர். சுருக்கமாகவும் இரண்டாயிரம் ஈரடிப்பாடலாகவும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு, 1900 -ஆம் ஆண்டு ரொமேஷ் சந்திர தத் என்பாரால் கல்கத்தாவில் வெளியிடப்பட்ட இராமாயணத்திற்கு ஜெர்மானிய அறிஞர் மாக்ஸ்முல்லர் முன்னுரை அளித்துள்ளார்.

தமிழகத்தில் 12-ஆம் நூற்றாண்டில் கம்பனால் இப்பெருங்காப்பியம் பெயர்த்தெழுதப்பட்ட பிறகு, இந்திய மொழிகளான ஹிந்தியில் துளசிதாஸரும், வங்கமொழியில் கிரித்திபாஸரும், மராத்தியில் சீதரா என்பாரும் எடுத்தெழுதியுள்ளனர். தமிழிலேயே நடிப்பதற்கேற்ற வகையில் 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், சீர்காழி அருணாசலக் கவிராயர் முற்றும் பாடல்களாகவே அமைந்த இராமநாடகம் எழுதியுள்ளார். கிராமங்களில் ஆண்களும், பெண்களும் கும்மியடிக்கும்போது பாடுதற்குரிய முறையில் இராமாயணம் கும்மிப்பாடலாகவும் இருந்த உண்மை இப்போது புலனாகின்றது. இதுவரை கையெழுத்துப் பிரதியாகவே இருந்த புதுமையான இந்நூலைத் தொடர்ந்து 'செந்தமிழ்' வெளியிடும்.

- ஆசிரியர்

பதிப்புரை

இராமாயணமும் இந்தியாவும்

இந்திய இலக்கிய வரலாற்றில் இராமாயண காவியத்திற்குள்ள இடம் முதன்மையானது என்பதில் இருவேறு கருத்துக்களுக்கு இடமே இல்லை. வடமொழியில் வான்மீகி தந்த மூலக்கதையை இந்தியக் கவிஞர்கள் தங்கள் கற்பனை வளத்திற்கும் கவிதை அனுபவத்திற்கும் இடச்சூழலுக்கும் ஏற்றாற்போலச் சொற்சுவை கூட்டி புதுப்புது வகையில் இயற்றி மகிழ்ந்தார்கள். கம்பன் தந்த இராமாயணமும்,அருணாசலக் கவிராயரின் இராம நாடகக் கீர்த்தனையும் இவ்வகையில் நற்றமிழில் கனிந்த இலக்கிய ஏடுகளாகும்.

கலையும் தஞ்சையும்

தமிழ் நாட்டின் நெற்களஞ்சியமாகத் திகழும் தஞ்சைத் தரணி கலைக் களஞ்சியமாகவும் திகழும் தன்மையது. பருவத்தே பயிர் செய்து பசியாற உண்டு, பிறருக்கும் மகிழ்ந்தளித்து ஓய்வு நாட்களை மகிழ்வுடன் போக்க, முன்னாட்களிலிருந்தே பல்வகையான விழாக்களை வேளாண் குடிமக்கள் அமைத்துக் கொண்டாடினர். சிந்தைக்கும் செவிக்கும் விருந்தளிக்கும் கலைகள் பல வளர்ந்தன. பலரால் போற்றி வளர்க்கப்பட்டுச் செழித்து வளர்ந்த கிராமியக் கலைகள் ஆதரவின்றி நலிந்தாலும், அவற்றின் அடிச்சுவடுகள் இன்றுகாறும் ஆங்காங்கே தென்படுகின்றன.

கும்மி விளையாட்டு

கும்மி என்பது கிராமப்புறங்களில் இளம் பெண்கள் கை-கொட்டி ஆடும் ஒரு விளையாட்டு. சிற்சில சமயங்களில் குறிப்பாக விழாக்காலங்களில், ஆடவர்களும் இதனை விளையாடுவது உண்டு. பதினைந்து முதல் இருபதுபேர் வட்டமாக நிற்பர். அவர்களுக்கு நடுவே அமர்ந்து கும்மிப் பாடலை நன்கு பாடத்தெரிந்த ஒருவர் பாடுவார். விளையாடுபவர்களும் இராகம் போட்டுத் தாளத்திற்கு ஏற்ப கையொலி எழுப்பி வட்டமாகச் சுற்றிக் கும்மி அடிப்பார்கள். இசையும் கூத்தும் நிறைந்த இவ்விளையாட்டு எதிர்காலச் சந்ததிகள் எண்ணிப் பார்க்க முடியாத ஒன்றாகி மறைந்து கொண்டிருக்கின்றது.

இராமாயணக் கும்மி

தஞ்சை மாவட்டத்தில் ஒரத்தநாடு - மன்னார்குடி சாலையில் ஒக்கநாடு கீழையூர் (ஒக்கூர்) என்பது ஒரு சிற்றூர். சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன் இங்கு வீரபத்திரன் என்பவர் வாழ்ந்து வந்தார். கல்வியிற் சிறந்த இவர் கம்பரின் கவிதையில் திளைத்து அருணாசலக் கவிராயரின் கீர்த்தனையையும் நன்கு உணர்ந்து படித்து கும்மி விளையாட்டிற்கு சரியான பாடல்கள் இல்லாமையைப் போக்க 'இராமாயணக் கும்மி' என்ற இந்த இசைப்பாடலை எழுதினார்' இந்த 'இராமாயணக் கும்மி'யில் இராமன் பிறப்பு முதல் சீதைமணம், இராவணன் வதை, இராமன் முடிசூட்டிக் கொள்ளுதல் வரையிலான நிகழ்ச்சிகள் விவரிக்கப்படுகின்றன. கம்பனுக்கு சடையப்ப வள்ளலும், அருணாசலக் கவிராயருக்கு சிற்றேரி - அருணகிரி முதலியார், வேங்கடசுப்பராய பிள்ளை, அக்கம்மாள் பேட்டை - வேங்கடாசல செட்டியார் போன்றவர்களும் உதவியதைப் போல, இக்கும்மிப் பாடலைக் கவிஞர் இயற்றுவதற்கு மதுக்கூர் ஜமீன்தார் துரைச்சாமி என்பவர் பொருளுதவி செய்துள்ளார். செய்ந்நன்றி மறவாத வீரபத்திரன் கும்மிப்பாடலில் பல இடங்களில் மதுக்கூர் ஜமீன்தாரை நினைவுகூர்கின்றார். மதுக்கூர் என்ற பேரூர் பட்டுக்கோட்டை-மன்னார்குடி சாலையில் இருக்கின்றது.

கும்மி விளையாட்டிற்காக இயற்றப்பட்டது இந்நூல். ஆனால் தற்போது மரண வாயிலில் கிடப்பவர்கள் நற்கதி அடைவதற்கென்று பயன்படுத்தப்படுகின்றது. மரணப் படுக்கையில் கிடப்பவர் கேட்குமாறு மெல்லிய குரலில் ஒருவரே அருகில் அமர்ந்து இதனைப் பாடுவார். குடும்பத் தொல்லைகளைப் போக்கும் என்ற நம்பிக்கையில் இதை வீட்டில்படிக்கச் செய்து பட்டாபிஷேகம் செய்வதும் சிற்சில சமயங்களில் நிகழ்வது உண்டு.

மக்களின் அன்றாடப் பிரச்சனைகளும் அவசரங்களும் தடைக்கற்களாகியதால், பழந்துணியில் சுற்றப்பட்டு ஆண்டு முழுவதும் பெட்டியில் உறங்கி ஆயுத பூசையன்று மட்டும் விழித்து மஞ்சள் குளித்துக் குங்குமம் இட்டுக் கொள்ளும் ஒரு பூசைப் பொருளாகவும் ஆகிவிட்டது இந்த இராமாயணக் கும்மி.

சுவடி கிடைத்த வரலாறு :-

ஒக்க நாடு முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. அ.வேதையன், அவர்களால் இச்சுவடி பற்றிய செய்திகளை அறிய முடிந்தது. சுவடியைத் தேடும்போது, கீழவன்னிப்பட்டு என்ற கிராமத்தில் திரு.ந.முத்துக்குமர தேவர் அவர்களிடம் இருந்து முதல் பாகம் மட்டுமே கிடைத்தது. முழுமையான 'இராமாயணக் கும்மி' கக்கரை என்ற கிராமத்தில் திரு. வெ. மணியம் நண்பர் திரு. இராமசாமி அகியோரின் உதவியால் கிடைத்தது. இச்சுவடியின் இறுதியில் ''இந்தப் புத்தகம் யாருடையதென்றால் தஞ்சாவூர் தாலுக்கா புலவன் காடு மாகாணம் கக்கரை கிராமத்திலிருக்கும் வில்லன் கண்டியன் மகன் துளசி கண்டியன்'' என்ற செய்தி மூலம் சுவடியின் உரிமையாளரை அறிய முடிகிறது. இராமாயணக் கும்மியின் சிறப்புணர்ந்து செந்தமிழில் வெளியிட்டுச் சிறப்பிக்கும் ''செந்தமிழ்'' ஆசிரியர் திரு. டி.பி.எம். பெரியசாமி அவர்களுக்கும், மற்றும் இச்சுவடி கிடைக்க உதவியவர்களுக்கும் செல்லரித்துப்போக இருந்த இச்சுவடியின் சார்பில் யான் நன்றி செலுத்துகின்றேன்.

இச்சுவடி எந்தவித மாற்றங்களும் செய்யப்படாமல் அப்படியே பதிப்பிக்கப் பெறுகின்றது.

கடவுள் வணக்கம்

விருத்தம்

அனுமார் வணக்கம்

கதிரவன்மேல் பாய்ந்தானை கால்தந் தானை
கஞ்சனருள் பெற்றானை கடிய வாலி
பதிகடந்த சுக்ரீபர்க்கு அருள்செய் தானை
பன்னுமறைப் பொருளானை சேவித் தானை
மதிநுதலாள் தனைத்தேடி கடல்சென் றானை
வஞ்சகரூர் நீற்றானை மலைதந் தானை
துதிமிகுந்த விஜயரெகு ராமன் கும்மி
சொல்ல ஆஞ்ச னைமகனைத் துணைகொண் டேனே.

விநாயகர் வணக்கம்

1. ஸ்ரீதரன் அமரர் கோமான்
திருமகள் கொழுநன் மிக்க
மாதவன் துலாப மேனி
மலரடி யதனைப் போற்றி
யாதுலர் புகழும் ராமா
யணக்கும் மியிதனைப் பாட
பூதலம் துதிக்கும் மெய்க்கண்
பிள்ளை பொற்பதமே காப்பாம்.

திருமால் வணக்கம்

2. தெசந்தரு மாரு சங்கு
சக்கர கோதண்ட
புசபெல மதும் பீட
பொன்மகள் உறையும் மார்பா
திசைமுகன் விதியைப் பெற்ற
சேஷசற் சயனா யென்மூன்
விசைபெற கழலன் மீதே
விளங்கவந் தருள்செய் வாயே.

கேட்போர் பெறும் பயன்

3. மீனாமை பன்றி சிங்கம் மிச்க
மெய்க்குறளுக் கப்பால்
தானாகும் ராம சந்திர
தயாபதி முகிலைத் தானே
தேனாகும் அமிர்தம் போல
செப்பிய கும்மியைக் கேழ்ப்போர்
வானாகும் பதிக்கு மேலாம்
வைகுந்தம் பெறுவ தாமே.

அனுமார் வணக்கம்

4. அஞ்சிலே யொன்று பெற்றான்
அஞ்சிலே யொன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்றாகக்
ஆரியர்க்காக வேகி
அஞ்சிலே யொன்று பெற்ற
அணங்கைக் கண் டயலானூரில்
அஞ்சிலே ஒன்று வைத்தான்
அவனெம்மை யளித்துக் காப்பான்[1]

விநாயகர் வணக்கம்

5. சீராமராம[2] தசரத ஞருட
செல்வருமான திவாகரன் மேல்
பேரா மகிமைக் கும்மி சொல்லவே மெய்க்கண்
பிள்ளையார் பாதம் பெருந்துணையே
தாரணி போற்று மயோத்திபுரி வரும்
தாமன்ற சரத ராமன்றன் மேல்
பூரண கும்மிக்கித் தான்றுணையே மெய்க்கண்
பிள்ளையா ரானவர் பொற்பதமே.

கலைமகள் வணக்கம்

6. சீதாபதி ராமாயண மெனும் ராம
சீராம ராமசிரோன் மணிமேல்
மேதையுமான கும்மி சொல்லவே
மிகவெண் டாமரையாள் மிகத் துணையே

---

1. இப்பாடல் கம்பராமாயணத்திலிருந்து அப்படியே எடுத்தாளப் பட்டுள்ளது (பாலகாண்டம்-துதிப் பாடல்கள் 10).

2. 'சீ' என்பது 'ஶ்ரீ' என்பதற்குச் சமமாகப் பயன்படுத்தப் பெறுகின்றது.

மாதமும்மாரிகள் பேய்ந்திடவுஞ்
செயமானது தானும் வளர்ந்திடவும்
பூதலமெங்குந் தழைத்திடவும் ராசர்
பொன்முடி சூட்டி மகிழ்ந்திடவும்

7. சந்திரா சூரியர் தேரிடவு மிகத்
தர்ம மடங்களும் நேரிடவும்
இந்திர தேவர்கள் வாழ்ந்திடவுந் தவமென்பது
யெங்கு மிகுந்திடவும்
வையம் வரும்கலி போய்விடவும் கற்பு
மாதர்களெங்கு மேலாய் விடவும்
மெய்யும் பெருமையும் நின்றிடவு மிக
பொய்யும் கவடுகள் போய்விடவும்

8. சொல்லும்படி யிது ராமகும்மி யிதைச்
சொல் லு மடவுடன் சொல்பவற்கு
வல்லமையான தவம்பெருகு மிந்த வண்மை
வரலாறு மென்ன வென்றால்
முன்னாலே பார்பதிக்கே தயவாகி யிதை
சொன்னாரே சங்கர மூர்த்தி யுந்தான்
பின்னாலே நின்னொடு நாரதரு மவர்
தன்னா லறிந்தாரே சொன்னதெல்லாம்

9. செப்பும் பொருளெல்லாந் தானுகந்தே வயறு
உப்பியே நாரதனார் மிகுந்தே
ஒப்பிலா யானவன் மீகத்திலே யதை
யோதினார் ஈசன் உரைத்ததெல்லாம்
வன்மீக ராகிய மாமுனி யுமந்த
வார்த்தையின் ஆனதைச் சேர்த்தி ணக்கி
நன்மையு பாகவே தாமாயதை சொல்லி
நாளுமே வைத்தாரே ராமாயணம்

10. அந்த மொழி தன்னைக் கம்பகவி ம[ை]த
யானையுமானவன் அத்துணையும்
சிந்தைமகிழத் தமிழ்ப்படுத்தி யதைச்
சீராக வைத்தான் சிறப்புடனே
இங்கிதமாகிய சித்திரமு மது
எல்லாம் பன்னீ ராயிரத்தையும்
சங்கீதமாகவே சொல்லி வைத்தா னிதைத்
தன்னை யருணாசலக் கவிஞன்.[3]

இராமாயணக் கும்மி

11. சக்கரை முக்கனி தேனுடனே ருசி
தானுமே யாகவே தானதையும்
[ஒக்குநாடன் வீரபத்திரன் இவை
யோதுவன் கும்மிக்கும் ஒப்பிணையாய்
தஞ்சைப்பதி மகராச னெனுமிகத்
தர்மங்க ளோங்கித் தழைத்திருக்கும்
கஞ்ச மலர்த்திரு மார்பழகன் சோழன்
காவேரித்தீரன் கர்ண மிசையோன்.

12. தேசாதிபன் மிக போசலேயான் பெருஞ்
செங்கோல் பிடித்திருந்த சீமை யெல்லாம்
ராசாதிபன் சரபோசி எனுமகா
ராசாதிபன் ஆளும் நாளையிலே

3. கம்பராமாயணத்தை அடியொற்றி சீர்காழி அருணாசலக் கவிராயர் "இராம நாடகக் கீர்த்தனை" என்ற நூலை யாத்துள்ளார்.

[ ] அடைப்புக் குறியிலுள்ள வரிகள் ஓர் ஏட்டில் உள்ளவை. இவை வன்னிப்பட்டு ஏட்டில் காணப்படவில்லை; ஆனால் கக்கரை ஏட்டில் காணப்படுகின்றன- இராமாயணக் கும்மி ஆசிரியரின் பெயரையும் அவர் வாழ்ந்த ஊர்ப்பெயரையும் மறைக்க அவ்வரிகள் உள்ள ஏடு எடுக்கப்பட்டிருக்கலாம் என ஊகிக்க முடிகிறது.

நாலாயிரத்தித் துளாயிரமு மது
நாலாறும் ஓராறும் நாலுடனே
ஏலானதான் கலி சென்றதிலே யிதை
ஏத்தியே தான் துகை நின்றதிலே

அவையடக்கம்

13. அத்தியுந் தும்பைபச் சடைமுடி யாரெனும்
அம்பல வாணரை யன்புடனே
தோஸ்திரஞ் செய்பவன் வீரபத்திர னெனும்
வாத்தியார் தானுமே சொல்லலுத்தேன்
சொல்லுந் தமிழிக்கிது என்னமுறை யென்று
சொல்லவும் போகாது சொற்புலவோர்
நெல்லும் பதிரும் ஒருமையைப போலெனை
நெஞ்சில் மதிப்பாரேந்த...

14. மெய்ப்பரந் திட்டிடும் பைங்குதிரைக் கெதிர்
மிக்கவுந் தானு மிரவியின் முன்
இப்பரந்திட்டிட எண்ணிடும் போலிதை
ஏத்தியும் சொல்வன் நானித் தமிழை
பாயும் புலிக்கெதிர் மேடமுமே வந்து
பாச்சலிட்டிடு மந்த பண்பினைப் போல்
தோயுந்தமிழ்ப் புலவோர்கள் முன்னே யிதைச்
சொல்லவுந்தானே துணிந்து கொண்டேன்.

15. கத்தறிந் திட்டதோர் வித்துவர்கள் இந்தக்
கல்வியைத் தானுங் கருத்தினிலே
பித்துப்பிடித்தவன் வார்த்தை யென்றே யிதைப்
பேசியுந் தானும் பொறுத்திடுவார்
கானக்கிளியொடு மாந்தையுமே கூடிக்
கத்திடும் பாவினைக் கானதுபோல்
ஞானத் தமிழ்க்கரை கண்டவர்க ளிதை
நாளுமே பார்த்து நயந்திருப்பார்.

கேட்போர் அடையும் பலன்கள்

16. கட்டிய நாரொரொடு பூமலரு மதைக்
கைக்கொண்டு கண்ணியில் கட்டுவர்போல்
இஷ்டமுமாகிய ராமகதை யிதை
யெல்லோரும் கேழ்ப்பா ரிருந்துமேதான்
ராமாயணக் கும்மி கேழ்க்கவுமே யுரிராமன்
பதமுண்டு பார்க்கவுமே
சீமானெனத் தினம் வாழ்ந்திடுவார் பிர்ம
தேவப் பட்டங்களை யாண்டிடுவார்.

17. புத்திரருமுண்டு பலனுமுண்டு மிகப்
பூமகள் வாசமும் போதவுண்டு
நித்திய சோபனந் தானுமுண்டு மிகப்
பத்தியுடன் கேழ்க்கும் உத்தமற்கு]
பூலோகமிக்கப் புறந்தனிலே நீங்கிப்
போகலாந் தானும் வைகுந்தத்திலே
சாலோக சாமீப ராம்கும்மி தன்னைப்
படித்தோருங் கேழ்ப்போருமே.

18. தன்மபுராணம் இராமகும்மி யிதைக்
கத்தவர் கேழ்ப்பவற்கும்
சென்ம மெடுப்பதும் விட்டுமே தானினிச்
சித்திக்கும் வைகுந்தம் முந்தியுந்தான்
பாசமும்போகும் தவம்பலிக்கும் மிகப்
பண்பொடு ஞானம் பரிமளிக்கும்
கேசவனாதி பகவனு மாமவர்
கீர்த்தியு மானதைக் கேழ்ப்பவர்க்கே,

தொடரும்...

தமிழறிஞர் மறைவு

நாகர் கோவிலைச் சார்ந்த முதுபெரும் தமிழறிஞர், பண்டித இராமசுப்பிரமணிய நாவலர் (மால்மருகனார்) அவர்களின் மறைவு தமிழுலகிற்கும் — குறிப்பாக செந்தமிழ் அன்பர்கட்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். 'சாவில் தமிழ் படித்துச் சாக வேண்டும்; எந்தன் சாம்பல் தமிழ் மணந்து வேக வேண்டும்' என்னும் தமிழ்விடு தூதிற்கு இலக்கியமாகத் திகழ்ந்த நாவலர், கடைசி மூச்சு உள்ளவரை செந்தமிழின் சீரும் சிறப்பும் பற்றிய நினைப்பாகவே இருந்தார் என்பது மிகையன்று. உடல் நலம் குன்றியிருந்த நிலையிலும், இரண்டு மூன்று கட்டுரைகளை முன்னதாகவே செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பியிருந்ததே இதற்குச் சான்று. தமிழ் இலக்கிய இலக்கணப் புலமையோடு, வடமொழி, ஆங்கிலம் மலையாளம் ஆகியவற்றில் புலமை பெற்றிருந்த நாவலர் அவர்கள் மருத்துவம், உடல்நூல் பற்றிய நூல்களைத் தமிழிலும் எழுதிக்காட்டிய சிறப்புடையார், எழுத்தெண்ணிப் பயின்ற நுண்மாண் நுழைபுலம் மிக்க மரபுவழிப் புலவருள் குறிப்பிடத்தக்கவராய்த் திகழ்ந்த நாவலர் அவர்களின் மறைவினால் துயருறும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர்

அரும்பொருள் அகவல்

கவிராச பண்டித. இராமசுப்பிரமணிய நாவலர்
(மான்முருகனார்)

உலகம் பலப்பல அலகில தோன்றின
இலகு பல்லுயி ரிவற்றிடை யுளவே;
ஒவ்வோ ருலகினு முயிர்களி னுடனிலை
வெவ்வேறு படுமென விளம்பிடு நூல்கள்;
இழிந்தபல் லுயிர்கட் கியைந்த வுடம்பும்
அழிந்தபல் பண்பு மவற்றிற் கமையும்;
உயிர்க ளெண்ணில வுற்றன, வவற்றின்
செயிரறு தோற்றஞ் சிறிது மறிகிலம்;
உயிர்க ளெவ்வா றுருத்தன வென்னில்
பயிறரு மறையும் பகர்வதொன் றில்லை;
இயன்ற முதலீ றில்லன வுயிர்கள்
உயர்ந்தன தாழ்ந்தன வுறும்ம் மலத்தின்
என்றுநின் றியம்புவ விவண்பல நூல்கள்;
துன்று முயிர்களைத் தோற்றுவித் தவர்யார்?
ஆமா றொன்று மமைதிமுன் னின்றேல்
தாமே தோன்றல் தகுதியு மன்று;
வருந்திய வுயிர்கள் வந்து பிறக்க
விரும்பின வல்ல, வேண்டினு மழியா;
இறைவ னிலையு மின்ன தேயெனச் சில
மறைக ளுணர்த்தும் வாய்மை யறியேம்;
இறைவன் றானு மெங்ஙனந் தோன்றினன்,
மறையவு மவற்கு வல்லமை யின்று;
பலப்பல துன்பப் பட்டுயிர் வருந்தல்
நிலவிய வுயிர்க்கு நினையி னில்லையோ?
எல்லா வுயிர்களு மின்புற்று வாழ்வதை
அல்லால் யாது மறிகில வுயிர்கள்;
இன்னல் பற்பல வெய்திட வுயிர்கள்
என்ன செய்தன வியம்புவர் யாவர்?
அழிவி லிறையிட னின்றுபல் லாவிகள்
நிழலென வந்தன நீணிலத்தென

அறையு நூல்களு மளவில காண்மின்;
வீடுபேறென்று விளம்புவ தொன்று
கூடுநிலையுங் கூறுவ தரிதே;
நிறையு முயிரு மியைந்திட வேண்டா;
உறையு முலகு முற்றிட வேண்டா;
எண்ணின் யாண்டுமஃ தியைவது மில்லை;
துன்னிய வெல்லா மன்னுத லுளதே;
வெஞ்சிறை யகப்பட் டஞ்சிடு முயிர்கள்
எஞ்சுத லுய்தலில்லை போலும்!
இயற்கையு மிறையு மென்று முளவவை
செயற்கையிற் சிறிதுந் திரிவ தில்லை;
அறிவு மாற்றலுஞ் செறிவுட னின்றிவ்
வகிலமும் படைக்கு மழிக்கும் புரக்கும்;
அவற்றி னமைதி யறிவில மதனால்
எவற்றினு முள்ளஞ் செல்வது காறும்
ஆய்க; அப்பா லாய்தல் வேண்டா;
ஏய்வன வேய்வன வென்றுளங் கொள்க;
இயற்கையு மிறையு மென்று முளவென்
றியற்பட வறிக! விதுவே முடிபாம்;
இறையுள் தன்னிலை யாது மறியான்,
காலத் தத்துவங் கடந்துள வாகலின்
காலங் கடந்தவை கடவுளு முயிர்களும்,
உலக சக்கரத் துண்மை யறிதல்
இலகு முயிர்க்கிவ ணென்று மியலா
தாதலின் யாது மாயா திங்கே
ஓதிய நன்மை யோர்ந்து செய்திடுக;
இறப்பும் பிறப்பும் யாவர்க்கு முள்ளன
மறப்பொடு நின்று வருந்திட வேண்டா;
கடவுள் முதலாக் காலன் வரையும்
அடலுறு தத்துவ மாமென வறிக;

தத்துவ மெல்லாந் தனிப்படு வடிவில்
தத்தறக் கூண்டு சார்தலு மாகும்;
இயற்கையி னமைதி யின்னண மாகலின்
செயற்கையி னொன்று செய்தலும் வேண்டா;
காணுங் காரண காரிய நெறியைப்
பேணி யறிதல் பெரிது நன்றே!
இறையுள னென்றிங் கியம்பினு மில்லையென்
றறையினு மாக்கமு மழிவு மில்லை;
நாடிய வுலக நடக்கு மியல்பில்
கேடில் யாதுங் கிளப்பினும் பலப்பல;
உலக வாக்கமு முடம்பி னாக்கமும்
அலகில் வியப்பினை யளிக்குங் காண்மின்;
யாது முண்மை யிவண மறிகிலம்;
ஓது நூல்களு முரைக்கில வாகலின்
நிகழ்வன யாண்டு நினைந்திட வேண்டா;
இகழ்வி லறிவுட னியற்கையின் செயலென
அறிதல் வேண்டு மறிவுடை யோரே!
அறிவுறப் பிறிதொன் றறைந்திட லரிதே.
பிறந்தபின் வாழ்க்கை பிறிதில் லதுபோல்
இறந்தபின் வாழ்க்கை யாவர்க்கு மொக்கும்;
ஒவ்வொரு சமயத்த வர்க்கு முரைப்பின்
ஒவ்வோர் நிலையாங் கும்பரி லில்லை,
இறைவனுக் கன்ப னென்றுகை வைத்திடின்
துறைதரு வெஞ்சுடர் சுடாமை யுண்டோ?
அண்ண லாற்றலு மளவறிந் துதவும்
எண்ணிற் பிறிதொன் றுன்னிடல் வேண்டா;
நலமுந் தீங்கும் நடப்பன வெல்லாம்
இலகு மிறையறிந் தியல்வன வெல்க;
இயற்கையி னாகி யிலங்குமுக் குணத்தின்
செயற்கையி னாகித் திகழ்ந்திடு முலகம்;

கோளறு மறிவு குணத்திற் கின்மையின்
ஆளு பவன தறிவு பயன்படும்;
உலகப் பொருள்களி னுருவு மமைப்பும்
அலகில வமைந்தது மறிகிலம் யாமே;
இல்லன வில்லன யாண்டுமில் லனவே;
இல்லன வென்றிங் கியம்புவ வெல்லாம்
சொல்லிய வடிவில் தோன்றிய வழக்கே;
தோன்றிய வெல்லாந் தொல்லறு வடிவில்
ஆன்றமைந் தனவென வறிதல் வேண்டும்;
இறையு மியற்கையு மியைந்துல களிக்குமென்
றறையுஞ் சிலநூறு ளதுபொருந் திடுமே;
காவல னாகுங் கடவு ளென்னின்
ஏவல னாகு மியற்கையென் றறிக;
ஒருவர்க் குற்ற வுயர்வுக ளெல்லாம்
மருவிய வியற்கையின் வந்தன வென்க;
ஆகலி னவர்க்கோ ரருஞ் சிறப்பில்லை
ஏகலும் வருதலு மியற்கையி னாகும்;
சிறப்புஞ் செல்வமுஞ் செருக்கு மாட்சியும்
உறப்பெறு முரிமையு முறவு மெல்லாம்
நீரிடைப பாசியென நினைதல் வேண்டும்;
யாரிடை யாயினு மிதுநன் கொக்கும்;
எல்லா முணரி னியற்கையின் மயக்கம்
அல்லா லொன்றிங் கறைவதற் கில்லை;
பிறந்தன வுயிர்கள் பிறவிச் சிறைவிட்
டிறந்திட வென்று மியைகில வீண்டே;
உயிர்கட் கெல்லா முடம்பினில் வேட்கை
செயிரவு நின்று திகழ்ந்திடு முன்னம்;
இயற்கை யதன்வழி யியங்கிடு மாகலின்
அயற்பட வொன்றிங் காற்றலு மாகா;
கருதுப கோடி மருவுவ வெல்லாம்

அரிதென வோர்ந்தீங் ககற்றிட வேண்டும்;
இயற்கையின் வழிநின் றியங்குவ தல்லால்
செயற்பட வில்லை மயற்படு முலகம்;
உலகத் தோற்றமு மொடுக்கமு மெல்லாம்
வலமுற நோக்கினு மறைபொரு ளாகும்;
முடிவில வாகி முகிழ்ந்துள பலப்பல
வடிவிடை வந்து வயங்குவ தோவிறை
மருகிய தத்துவ மாண்பொரு ளெல்லாம்
உருவினில் வந்திங் கொளிர்தலு மாகும்;
உயிரிறை யாத லொன்று மோவெனில்
செயிரறு மறிவிற் றிகழ்தலி னொன்றும்,
உயிரிறை யோடு மொன்றுவ தல்ல
துயிரே யிறையா யொளிர்வ தில்லை
என்பார் பலர்பலர்; இறையா முயிரும்
என்பார் பலர்பலர். யாதோ வுண்மை??
எண்மையிற் பலபல வியம்பினும் யாண்டும்
உண்மை யொன்றென வுணர்தல் வேண்டும்;
இயற்கையின் றீய வியல்புகள் புகுந்தபின்
அயற்பட நீக்க லாவதன் றாமெனப்
பல்வகைப் பிறப்பிற் படுப்ப னிறையெனச்
சொல்வது முண்டு சில்வகைப் பனுவல்;
வறுமையும் பிணியும் வாய்ப்புற நின்று
சிறுமையுற் றிடுமுயர் செப்புதற் கரிய
உய்வதிங் கெங்ஙன முணர்கிலம் யாதும்
செய்வகை யாதுந் தெரிந்தில மிங்கே
ஏமுறு நூலி னியைந்த பாவைகள்
ஆமென யாமு மல்லற் பட்டுளம்;
இறைவனுக் கிரக்க மில்லை யாதுமென்
றறைதர நாணுவ ரகிலத் தவரே
அருளின் செல்வ னவனென வறையும்

பொருளுக் கெதுபொருள் பொருளுற வறியேம்;
உலக முழுது முற்று நோக்கின்
அங்கலு மயல்வடி வாமெனத் தோன்றும்;
இப்பெரு மாயை யிகந்திட வேண்டின்
ஒப்பரு ஞான மொளிர்தர வேண்டும்;
ஞான மென்பது நாடரு மிறையைத்
தானறி நிலையெனச் சாற்றுவர் பெரியோர்;
அறிவே யிறையென வறிக
செறிதரு முலகந் திகழ்ந்துநிற் பதுவே.

இலக்கியத் திறனாய்வு : ஓர் அறிமுகம்

டாக்டர். வை. சச்சிதானந்தன், M.A, M.Litt, Ph.D,

இக்கட்டுரை மேலைநாட்டு இலக்கியக் கொள்கைகளை மனத்தில் கொண்டு சில கேள்விகளை எழுப்பி அக்கேள்விகளுக்கு விடை கண்டறிய முயல்கிறது. இலக்கியமும் திறனாய்வும் ஒன்றுக்கொன்று இணைந்திருப்பதால், இலக்கியமென்றால் என்ன? 'திறனாய்வு' என்ற சொல்லிற்குப் பொருள் என்ன? என்ற கேள்விகளுக்கு விடை காண்பது முதற்கண் இன்றியமையாததாகின்றது. பிறகு திறனாய்வுப் பாகுபாடுகள், திறனாய்வுக் கொள்கைகள், நடைமுறைகள் ஆகியவற்றைச் சுருக்கமாக ஆராய்வதன்மூலம் மேலை இலக்கியத் திறனாய்வு கிரேக்கக் கலாச்சாரத்தின் ஆரம்பகாலத்திலிருந்து (சற்றேறக் குறைய 2,500 ஆண்டுகளுக்கு முன்பிருந்து) இற்றைக் காலம் வரை எவ்வாறு வளர்ச்சியுற்றிருக்கிறது என்பதை இக்கட்டுரை விளக்க முற்படும்.

இலக்கியம் என்றால் என்ன? என்ற கேள்வியே சிலருக்கு முட்டாள்தனமாகத் தோன்றலாம். சிரிப்பைக்கூட மூட்டலாம். ஆனால் இக்கேள்விக்கு விடைகாண்பது எளிதல்ல. இதற்கு முக்கிய காரணமென்ன வென்றால், எது இலக்கியம், எது இலக்கியமல்ல என்ற பாகுபாட்டிலுள்ள சிக்கல்தான். கவிதை, நாடகம். கதை அல்லது நாவல் என்பவை இலக்கியம் என்பது ஒருமரபு. உரைநடையையும் இவ்வரிசையில் சேர்த்துக் கொள்ளலாம். ஆனால் உரைநடை என்பது இலக்கியத்திற்கு மட்டுமே உரியதல்ல. நடைஅழகும் கருத்தாழமும் கற்பனைத்திறனும் கொண்ட இலக்கியச் சார்பற்ற கட்டுரைகள் — சான்றாக, தத்துவமேதை பிளேட்டோவின் புகழ்பெற்ற உரையாடல்கள் — இலக்கியமல்ல என்று மறுத்துக் கூறுவது கடினம். கவிதை வடிவிலுள்ள மருத்துவ நூல்களும், இயற்கை விஞ்ஞான நூல்களும் இலக்கியமல்ல என்று அரிஸ்டாடில் வலியுறுத்திக் கூறும்பொழுது, அத்தகைய மருத்துவ நூல்களும் இலக்கண நூல்களும் இலக்கியமே என்று மு. வரதராசனார் வற்புறுத்துகிறார்.

எழுத்துருவில் இருப்பவையெல்லாம் இலக்கியம் என்ற கூற்று, நடைமுறைக் கொவ்வாதது. ஏனென்றால் இது வாய்வழி இலக்

கியத்தை அறவே ஒதுக்கி விடுகிறது. நாடோடிப் பாடல்கள் போன்றவை ஒரு இலக்கியத்தின் ஆரம்பகாலத்தைச் சேர்ந்தவை என்ற கூற்று பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்தே ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மை. சிறந்த இலக்கிய உருவும் (form), வெளிப்பாடும் (expression) ஒருங்கமைந்த பெரும் நூல்கள் (great books) எல்லாம் ஒருங்கிணைந்ததே இலக்கியம் என்று கூறுவோமானால் பல துறைகளைச் சார்ந்த பெரும் நூல்களும் இலக்கியமாகின்றன: சான்றாக தத்துவ ஞானி பிளோட்டோவின் நூல்கள், வரலாற்றாசிரியர் கிப்பனின் (Gibbon) ரோமானியப் பேரரசைப் பற்றிய நூல், விஞ்ஞானி டார்வினுடைய படிமுறை வளர்ச்சிக் கோட்பாட்டைப் பற்றிய நூல். பெரும் நூல்களைத் தேர்ந்தெடுப்பதற்கு அடிப்படை: அத்தகைய நூல்களில் முருகுணர்ச்சியும் அறிவுசார்ந்த நோக்கும் இணைந்திருப்பதே.

பெரும் நூல்கள்தான் இலக்கியமென்றால் சிறு நூல்கள் இலக்கியத்தினுள் அடங்காவா என்ற கேள்வி எழுகிறது. சிறுநூல்கள் பல இயக்கங்களுக்கே வித்திட்டதுமல்லாமல் பல புதிய இலக்கியப் படைப்புக்கள் தோன்றுவதற்கும் காரணமாய் இருந்திருக்கின்றன. ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் தோன்றிய விதத்தை இதற்குச் சான்றாகக் கூறலாம். அவர் சில நாடகக்கதைக் கருவூலங்களைப் பலருக்குத் தெரியாத நூல்களிலிருந்து எடுத்துக் கையாண்டு பெரிய நாடகங்களைப் படைத்தார்.

இலக்கியம் என்ற கருத்தை வரையறுத்தலில் உள்ள சிக்கல்களை மனத்திற் கொண்டு சிலர் இலக்கியம் என்றால் இலக்கியக்கலை என்று கூறுவர். அதாவது கற்பனை இலக்கியம்தான் இலக்கியக் கலை என்று கூறி விடுவர். ஆனால் மற்ற துறைகளைவிட இலக்கியத்தில் கற்பனையின் ஆட்சி மிகுதியாக இருந்தாலும், கற்பனை என்பது இலக்கியத்திற்கே உரியது என்று கூற இயலாது. இந்தச் சிக்கலை நாம் புறக்கணித்தாலும், கற்பனை இலக்கியத்துள் வாய்மொழி இலக்கியமும் அடங்கியது என்ற உண்மையை நாம் ஒதுக்கிவிட முடியாது

மொழியைப் பயன்படுத்துவதில் இலக்கியம் மற்ற கலைகளிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது என்ற கேள்விக்கு விடை காண்பதன் மூலம் இலக்கியத்தை மிக எளிய முறையில் வரையறுக்க நாம்

முற்படலாம் ஐம்பது ஆண்டுகட்குமுன்பே ஐ. ஏ. ரிச்சர்ட்ஸ் இலக்கிய மொழி மனதைக் கிளரச்செய்வது (emotive) என்றும், விஞ்ஞான மொழியைக் குறிப்பீட்டு (referential) மொழி என்றும் பிரித்தார். இந்தகைய பாகுபாடு ஒரு அடிப்படை உண்மையை விளக்குகிறது என்றாலும், இலக்கிய மொழியெல்லாம் மனக்கிளர்ச்சியை உண்டாக்குவது, விஞ்ஞான மொழியெல்லாம் ஒன்றைத்தவிர வேறொன்றைக் குறிப்பதில்லை என்று திட்டவட்டமாகக் கூறமுடியாது. மேலும், இலக்கிய வரம்பிற்குள்ளேயே மொழி பல வகைகளிலும் பயன்படுத்தப் படுகிறது ஒரு நாடகத்தில், ஒரு சூழ்நிலையில் இரண்டு பாத்திரங்கள் பயன்படுத்தும் மொழியும், அதே சூழ்நிலையில் ஒரு நாவலிலோ அல்லது ஒரு தொடர்கவிதையிலோ இருபாத்திரங்கள் கையாளும் மொழியும் வேறுபட்டிருக்கும் என்பது உறுதி.

இலக்கியம் என்பதைப் பற்றிய கருத்தைப் பொறுத்தவரையில் ஆங்கிலத்தில் உள்ள சிக்கல் தமிழில் இல்லை. ஆங்கிலத்தில் 'literature' என்ற சொல்லிற்குப் பல வேறு பொருள்கள் உண்டு வாய் இலக்கியம், எழுத்திலக்கியத்திலிருந்து தெருவில் சோப் முதலிய பண்டங்கள் பற்றி அவற்றை விற்பவன் கொண்டு வரும் அச்சுக் குறிப்பு வரையில் Literature எனலாம். இந்தப் பரந்த, ஆனால் குழப்பமான வரையறைகள் தமிழில் இல்லை. சங்க நூற்கள் முதற்கொண்டு புதுக்கவிதைகள் வரையிலுள்ளவை இலக்கியமே என்று, பழமைவாதிகளைத் தவிர, மற்றவர்கள் ஒப்புக்கொள்வர். பொதுவாக, இலக்கியவழக்கையும் அதன் வளர்ச்சியையும் சார்ந்த நூல்களையே இலக்கியம் என்ற கருத்தைப் பல ஐரோப்பிய இலக்கியங்கள் மறுக்க மாட்டா.

இப்பொழுது 'திறனாய்வு' என்ற சொல்லிற்கு என்ன பொருள் என்பதைப் பார்ப்போம் அதற்குமுன் இலக்கியத்திற்கும் திறனாய்விற்கும் உள்ள தொடர்பைப்பற்றிய சர்ச்சையில் கவனம் செலுத்துவது அவசியம். திறனாய்வு இலக்கியத்திற்குக் கீழ்ப்பட்டதா (subordinate) அல்லது கட்டுப்பட்டதா (dependent) என்ற கேள்வி பலநூற்றாண்டுகளாக விவாதிக்கப்பட்டதொன்று. இதற்கு ஒன்றுக்கொன்று முரண்பட்ட இரண்டு விடைகள் உண்டு: (i) திறனாய்வு இலக்கியத்திற்குக் கீழ்ப்பட்டது அல்லது கட்டுப்பட்டது; (ii) திறனாய்வு இலக்கியச்சார்பல்லாமல் தனித்து நிற்கும் தன்மையுடையது.

இரண்டாவது விடை ஒரு அடிப்படையான உண்மையைப் புறக்கணிக்கிறது. அதாவது, இலக்கியமின்றேல் திறனாய்வில்லை; இலக்கியம் திறனாய்விற்கு உயிர்நாடி. ஆயினும் இலக்கியத்தைப்போல திறனாய்வும் படைப்புத்திறன் (creativity) உடையது. ஆதலின் ஆங்கிலக்கவிஞன் கீட்ஸின் கடிதங்களில் கவிஞனைப் பற்றியும் கவிதையைப் பற்றியும் வரும் புதிய கருத்துக்களையும், கோல்ரிட்ஜின் இலக்கிய வரலாற்றில் (Biographia Literaria) கவித்துவத்தைப் பற்றி கூறப்பட்ட பல நுண்ணிய செய்திகளையும் டி. எச். லாரன்ஸின் கட்டுரைகளில் நாவலின் படைப்புத் தன்மை பற்றிக் கொடுக்கப்பட்டிருக்கும் பல அரிய தகவல்களையும் நாம் படித்து இன்புற முடிகிறது. மற்ற கலைகளைப் போல, இலக்கியத் திறனாய்வும் ஒரு கலை என்றாலும், மற்ற கலைகளைப்போல அது தனித்தியங்கும் தன்மையற்றது. ஆனால் அது இலக்கியத்தைப் பற்றி பல நுண்ணிய உண்மைகளை வெளிப்படுத்துவது மட்டுமல்லாமல், இலக்கியத்தைத் தன்னுடைய தாக்கத்தினால் வளர்க்கவும் செய்கிறது. இன்றைய அறிவுலகத்தில் இலக்கியத் திறனாய்வின் உதவியில்லாமல் இலக்கியத்தை ஆழ்ந்து அனுபவிக்க இயலாது. இதற்குக் காரணம், அது ஒரு கடுமையான கட்டுப்பாட்டினுள் இயங்கி, திறனாய்வு செய்வது ஒரு பொழுது போக்குக்கலை அல்ல என்பதை மெய்ப்பித்து விட்டது.

'திறனாய்வு' (criticism) என்ற சொல்லிற்கு என்ன பொருள் என்பதை இப்பொழுது ஆராய்வோம். இந்நூற்றாண்டின் தொடக்க காலம் வரை திறனாய்விற்கும் புலமைக்கும் (scholarship) தொடர்பில்லை என்ற கருத்து பரவலாக இருந்தது. அதற்குக் காரணம், புலமை சார்ந்த ஆராய்ச்சியாளர்கள் தங்களுடைய அறிவை விவிலிய நூல் விளக்கத்திற்கும் (exegesis) மொழி நூல் (philology) ஆராய்ச்சிக்கும் பயன்படுத்தியதே. ஆகையினால் நூல்களைத் திறனாய்வு செய்வதற்கு அறிவுகூர்மை இன்றியமையாததல்ல என்ற கருத்து நிலவி வந்தது. ஆனால் இன்று திறனாய்வு ஒரு நுண்ணிய கலையாகப் பரிமளிப்பதால், அது புலமையை வெளிப்படுத்தும் கருவியாக மாறிவிட்டது.

'Criticism என்ற சொல்லின் வேர்ச்சொல்லிற்கு முதலில் நுணுகி ஆராய்க' (analyze) என்ற பொருளும் பிறகு 'மதிப்பிடு

(evaluate) என்ற பொருளும் உண்டு. ஆகையால் நுணுகி ஆராய்தலையும் மதிப்பிடுதலையும் ஒருங்கிணைத்ததே இன்றைய திறனாய்வு என்று கூறலாம். அது ஒரு இலக்கிய நூலைப் பற்றியதால், ஒரு நூலை வகைப்படுத்தி, விளக்கி, மதிப்பிடுவது திறனாய்வாகிறது. இஃது திறனாய்வாளனின் தனிப்பட்ட சுவையுணர்வின் மூலமாகவோ அல்லது வரையறுக்கப்பட்ட முருகியல் கொள்கைகளை ஆதாரமாகக் கொண்டோ செய்யப்படலாம். ஆனால் இன்றைய நடைமுறையில் தனிமனிதனின் சுவையுணர்வை அடிப்படையாகக் கொண்ட விளக்க வுரைகளுக்கு ஆதரவு குறைவு. இலக்கியத்திறனாய்வு மட்டும்தான் இலக்கிய அறிவாற்றல் (literary scholarship) என்று கூறமுடியாது. அஃது மூலபாடத் திறனாய்வு (textual criticism) (பாடபேதங்களை ஆராய்ந்து ஒரு நூலை வெளியிடும் கலை), மொழியியல் (linguistics), இலக்கிய வரலாறு (literary history) ஆகிய துறைகளுடன் இணைந்தே செயல்படவேண்டும். இதைத்தான் முழுநிறைமை பெற்ற இலக்கிய அறிவாற்றல் (integrated literary scholarship) என்று கூறுவர். இது இன்றைய திறனாய்வின் சாரம்.

திறனாய்விற்கு நாம் கூறும் வரையறுத்தலும் விளக்கமும் திறனாய்வு இலக்கியத்தோடு தொடர்புடையது மட்டுமன்றி வேறில்லை என்ற தப்பெண்ணத்தை உண்டாக்கலாம். ஆனால் இலக்கியம் பலதுறைகளுடனும் நெருங்கிய தொடர்புடையதாகையால், இலக்கியத் திறனாய்வாளன் மற்ற துறைகளிலும் பயிற்சியுடையவனாயிருப்பது அவசியம். முக்கியமாக, தத்துவம், சமயம் (நம் வழக்கில்) இவையிரண்டும் சேர்ந்தே செயல்படுகின்றன. ஆனால் மேலை நாட்டில் அவை வெவ்வேறு துறையைச் சேர்ந்தவை. ஏனென்றால தத்துவம் அறிவுபூர்வமானது (intellectual). உளவியல், சமூகவியல், மனிதஇன ஆராய்ச்சி, பாட்டியல், ஓவியயியல் போன்றவை இலக்கியம் தோன்றுவதற்கு மூலங்களாகப் பயன்படுவதால் அவைகளின் உதவியுடன் இலக்கியத்தைத் திறனாய்வு விளக்கம் செய்வது இன்றியமையாதது. ஆகையினால் இற்றைய திறனாய்வு, பலதுறை அணுகுநெறி (multi - disciplined approach) யினது தாக்கத்தின் வெளிப்பாடும் ஆகும். 'திறனாய்வு' என்ற சொல்லை வரையறுக்கும் பொழுது இந் நெறியையும் அதனுள் அடக்க வேண்டும். இவ்வடிப்படையில் திறனாய்வு மூன்று கூறுகளை உடையதாகிறது தனிமனிதனின் சுவை உணர்வு, வரையறுக்கப்பட்ட முருகியல் கொள்கைகள்,

பலதுறை அணுகுநெறி. திறனாய்வில் இவைகளுடைய பங்கு என்ன என்பதை இனிவரும் விவாதத்தில் காண்போம்

இந்த மூன்று கூறுகளை விவரமாக ஆராய்வதற்குமுன்பு இப்பொழுது கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் நடந்து கொண்டிருக்கும் ஒரு சுவையான விவாதத்தைக் கவனிப்போம். கோலின் மகாப் (Colin MacCabe) என்ற விரிவுரையாளரை நிரந்தரமாக்குவதா கூடாதா என்பதே இந்த வாதத்திற்குக் காரணம். அவர் செய்த குற்றம்: இலக்கிய நூல்களை ஆங்கில நாட்டுமரபு வழிமுறையைப் பின்பற்றி அவைகளின் திறனாய்வு ஒருதனிமனிதனின் எண்ணப் பதிவே (impression) என்று கூறாமல், இற்றைய இலக்கிய கொள்கைகளின் (literary theories) அடிப்படையில் நூல்களைச் சுவைக்க தன்னுடைய மாணவர்களைத் தூண்டியதே. புகழ் பெற்ற ஆங்கில வார ஏடான "டைம்ஸ்' பத்திரிகையின் இணைப்பிதழ், (Times Literary Supplement) 1981 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 6ம் நாள் இதழில் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் எழுப்பியுள்ள பிரச்சினையைப் பற்றி ஒரு பட்டிமன்றமே நடத்தி விட்டது. இதில் பங்கு கொண்ட இலக்கிய அறிவாளிகள் பல நாடுகளைச் சேர்ந்தவர்கள்; ஆங்கில நாட்டு அறிஞர்கள் சிலரைத் தவிர, மற்றவர்கள் எண்ணப்பதிவு நோக்கைக் கண்டித்து, கொள்கை அணுகுமுறை (theoretical approach), முருகியல அணுகுமுறை போன்றவற்றை ஒதுக்கி இலக்கியங்களைப் படிப்பது ஒரு சாபக்கேடு என்று திட்டவட்டமாகக் கூறுகிறார்கள். இவ்விவாதத்தில் பங்குகொண்ட பேராசிரியர் ஜார்ஜ் ஸ்டைனர் (ஜெனிவா பலகலைக்கழகத்தில் ஆங்கிலத்துறைத்தலைவர்) ஆங்கில நாட்டிற்கு வெளியே ஒரு இலக்கிய நூல் எப்படி கற்பிக்கப்படுகிறது என்று விவரிப்பது குறிப்பிடததக்கது :

"இன்றைய இலக்கியப் படிப்பு (studies) பயன்படுத்தும் பகுப்பு ஆராய்ச்சிக் கலைமுறைகளு (techniques of analysis) க்கு மூலம் மொழி நூலும் (philology), விவிலிய நூல் விளக்கஉரையும் (biblical exegesis) பட்டுமன்றி, மனிதப் பண்புடை விஞ்ஞானக் கலைகளும் (human sciences) கூட, அதாவது மொழியியல், அறிவுத்துறை விளக்க இயல் (epistemology), சமூகவியல், மனஇயல், மனிதஇன வரலாற்றியல் ஆகியவை ஒரு இலக்கிய நூலின் மூலபாடப ஒரு முழுப் பொருளாகும் (complete object). அதற்கு

வெளி உருவம் தரும் இலக்கணக் கூறுகள் அதற்கு மதிப்புநிலை (status) உண்டாக்கும் அதன் உள்நோக்கம், அதன் பொருள் விளக்கம் (decipherment), அதனை உருவாக்கிய பருப்பொருள் மற்றும் சமூகச் சூழ்நிலை அதன் தோற்றுவாய் மக்களிடையே அதற்குள்ள வரவேற்பு ஆகியவை சம்பந்தமான உளவியல் உண்மைகள் இந்த விபரங்கள்தான் திறனாய்வாளனுக்கும் இலக்கிய மாணவனுக்கும் இன்றியமையாதவை.''

ஒரு இலக்கிய நூலை எப்படிக் கற்றறிய வேண்டும் என்று விளக்கும் பேராசிரியர் ஸ்டைனரின் கூற்றை பரந்த நோக்குடைய எந்தத் திறனாய்வாளனும் மறுக்கமாட்டான்.

திறனாய்வு மூன்று கூறுகளை உடையது என்று கூறுவோமானால், அதன் முதற்கூறு தனிமனிதவுணர்வு. இவ்வுணர்வு நான்கு இரட்டை முறைகளில் ஆனால் ஒன்றுக்கொன்று மாறுபட்டவகையில் வெளிப்படுகின்றன : (i) கருத்தியல் அல்லது கொள்கைச் சார்பு theoretical) செயல்முறைச் சார்பு (practical); (ii) தற்சார்பில்லாத் தன்மை (objective) தற்சார்புடைத்தன்மை (subjective); (iii) புறச்சார்புடைமை (extrinsic); அகச்சார்புடைமை (intrinsic) ; (iv) விளக்க முறை (interpretative) ; தீர்ப்பு முறை (judicial) இவ்விரட்டை முறைகள் சில சமயங்களில் ஒன்றின் மீது ஒன்று படிந்திருந்தாலும் இவைகளைப் பிரித்து வரையறுக்கமுடியும்.

கருத்தியல் சார்புத் திறனாய்வும் (theoretical criticism) செயல்முறைச்சார்புத்திறனாய்வும் (practical criticism) இயற்கைய க ஒன்றிற்கொன்று வேறுபட்டாலும் உண்மையாக அவை ஒன்றோடொன்று சார்ந்தவை. இலக்கிய நூல்களை ஆராய்ந்து விளக்கி, அவை ஒரு இலக்கியத்திலுள்ள ஒழுங்குமுறை அல்லது பல இலக்கியங்களை ஒன்றுசேர்க்கும் ஒழுங்குமுறையைச் சேர்ந்தவை; அல்லது அந்நூல்களைப் பல வகையான குண நலன்களையுடையவை ஆகையால் அவற்றைப் பல கூறுகளாகப் பிரிக்கலாம்; அல்லது ஒரு நூல் மற்றொரு நூலிலிருந்து பலவகையிலும் வேறுபட்டதுபோன்ற உண்மைகளை மெய்யெனக் காட்டுவதற்கு உருவாக்கப்பட்ட கொள்கைகளைப் பயன்படுத்துவது தான் கருத்தியல் சார்புத்திறனாய்வு. சிறந்த எடுத்துக்காட்டுகள் ; அரிஸ்டாட்டிலின் கவிதையியல் (Poetics); ஐ. ஏ. ரிச்சர்ட்ஸின் திறனாய்வுக் கொள்கைகள் (Principles of Literary capriticism) போன்றவை.

செயல்முறைத் திறனாய்வில் குறிப்பிட்ட எழுத்தாளர்களையும் அவர்களுடைய நூல்களையும் ஆராய்கிறோம். இத்தகைய மதிப்பீட்டில் கொள்கைகள் மறைமுகமாகவே,பயன்படுத்தப்படும். அல்லது சந்தர்ப்ப சூழ்நிலையைப் பொறுத்து கொள்கைகள் வெளிப்படையாகப் பயன்படுத்தப்படலாம். ஆனால் இவ்வேளைகளில் கொள்கைகளைவிட மதிப்பீட்டிற்குத்தான் செல்வாக்கு அதிகம் அளிக்கப்படும் செயல்முறைத் திறனாய்விற்கு எடுத்துக்காட்டு சாமுவேல் ஜான்ஸன் அவர்களின் கவிஞர்களின் வாழ்க்கைகள் (Lives of the Poets). ஒவ்வொரு நூலிலும் கவிஞனின் வாழ்க்கை வரலாற்றைத்தொடர்ந்து. அவனுடைய நூல்களை தன்னுடைய விருப்பு, வெறுப்பின் அடிப்படையில், ஆனால் சிறந்த மொழிநடையில் ஜான்ஸன் அலசுகிறார். ஒவ்வொரு நூலும் அவருடைய ஆளுடைமைக்கு ஒரு எடுத்துக்காட்டு.

மற்ற மூன்று இரட்டை முறைகளைச் செயல்முறைத் திறனாய்வின் கீழ் அடக்கிவிடலாம். ஏனென்றால் அவற்றைப் பயன்படுத்துவதில் கொள்கை விளக்கத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுவதில்லை தற்சார்புடைத் திறனாய்வில் (subjective criticism) ஆய்வாளன் ஒரு நூலினுடைய அமைப்பிலோ அல்லது உள்ளடக்கத்திலோ தன்னுடைய பார்வையைச் செலுத்தாமல், தன்னுடைய உணர்ச்சிகளின் மூலமாகவோ அல்லது வெறுப்பு விருப்புகளைப் பயன்படுத்தியோ அதனை விளக்க முற்படுகிறான். இது முற்றிலும் தவறானதல்ல; தற்சார்புடை நிலையிலும் திறனாய்வாளன் தன் அறிவை இழக்காமலும், தன்னுடைய உணர்வுகளை மீறவிடாமலும், அவைகளின் மூலம் விளக்கவுரை அளிக்கமுடிந்தால் அது ஒரு சிறந்த திறனாய்வாகப் பரிமளிக்கும். பத்தொன்பதாம் நூற்றாண்டைச்சார்ந்த வில்லியம் ஹாஸ்லிட் (William Hazlitt) சார்ல்ஸ் லாம்ப் (Charles Lamb) ஆகியவர்களின் ஆங்கிலக் கட்டுரைகளை இதற்குச் சான்றாகக் கூறலாம்.

இதிலிருந்து தற்சார்பற்ற திறனாய்வில் (objective criticism) தனிமனித உணர்ச்சிகளுக்கும் விருப்பு வெறுப்புகளுக்கும் இடமில்லை என்பதை நாம் எளிதில் ஊகிக்கலாம். இம்முறையில் ஒரு நூலை நூலாகவே கணிக்காமல், அவ்வாசிரியனைப் பற்றிய வாழ்க்கையை மனத்தில்கொண்டு திறனாய்வை அரசியலாக மாற்ற முயல்வது தவறு, இந்தத் தவறை பெரிய ஆங்கில அறிஞர் மாத்யூ ஆர்னல்ட் (Matthew Arnold) அவர்கள் கூட அற்புத நவிற்சிக் கவிஞரான ஷெல்லி

(Shelley) யின் கவிதைகளை மதிப்பிடுவதில் செய்திருக்கிறார். முதல் மனைவியை நடுத்தெருவில் விட்டுவிட்டு மற்றொரு பெண்ணுடன் ஷெல்லி ஓடி விட்டதனால் அவருடைய கவிதைகள் ஆர்னல்டிற்குப் பிடிக்காமல் போய்விட்டன. இன்றைய திறனாய்வுக் களத்தில் தற்சார்பற்ற திறனாய்விற்கு மதிப்பு நிரம்பவுள்ளது இதற்குத் திற னாய்வ ளர்களுக்கு விஞ்ஞான நோக்கில் உள்ள நம்பிக்கையே முக்கிய காரணம். ஆயினும் ஒரு நூலை மதிப்பீடு செய்யும்பொழுது விஞ்ஞானியைப்போல் ஆளுடைமையை முழுவதும் ஒதுக்கிவிட இயலாது ஏனென்றால் பல நூல்களிடையே ஒருகுறிப்பிட்ட நூலை மட்டும் திறனாய்வாளன் தேர்ந்தெடுத்து அதனை விளக்க முற்படுவதிலேயே தற்சார்புடைத் தன்மை விளங்குகிறது. திறனாய்வாளன் தன்னுடைய ஆளுடைமையைச் சிறந்தமுறையில் வெளிப்படுத்துவதின் மூலம் தன்னுடைய மதிப்பீட்டிற்கு உயிரூட்டுகின்றான். தற்சார்பற்ற திறனாய்வு என்பது விஞ்ஞானம், தற்சார்புடைத் திறனாய்வு என்பது கலை என்ற கூற்று மிகையானது.

(தொடரும்)

சிலம்பின் பாவிகம்

நெல்லை. ந. சொக்கலிங்கம், எம். ஏ., டி ஜி. டி.,
அஞ்சல்வழிக் கல்வித்துறை
மதுரைப் பல்கலைக்கழகம்

''தேனிலே ஊறிய செந்தமிழின் சுவை
தேறும் சிலப்பதிகாரம்''

என்று கவிமணி பாராட்டிய பைந்தமிழ்க் காப்பியத்தின் பாவிகப்-பண்புகளைப் பகுத்துணர்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

'பாவிகம்' பற்றி முதன்முதல் தண்டியலங்காரமே பேசுகின்றது. பெருங்காப்பியம், காப்பியங்களுக்குரிய இலக்கண வரையறைகளைப் பற்றிப் பொதுவணி இயலில் 8,9,10 ஆகிய நூற்பாக்களில் கூறிய பின்னர், பொருளணி இயலின் இறுதி நூற்பாவிலே தான்,

''பாவிகம் என்பது காப்பியப் பண்பே'' என்று வருகின்றது. ''பாவிகமென்று சொல்லப்படுவது பொருட் டொடர்நிலைச் செய்யுட் திறத்துக் கவியாற் கருதிச் செய்யப்படுவதொரு குணம்'' என்பது சுப்பிரமணிய தேசிகரின் உரை. இந்த நூற்பா வடமொழிக் காவியாதர்சத்தின் மொழி பெயர்ப்பே. காவியாதர்ச ஆசிரியர் பெருங்காப்பியத்தின் பண்புகளைப் பற்றி முதல் அத்தியாயத்தில்,

''சர்க்கங்கள் அளவு கடந்து நீளக்கூடாது''

என்று எச்சரிப்பார். இரண்டாவது அத்தியாயத்தில்,

''காவியத்தில் மட்டுமன்று; நீண்டு செல்லும்
எந்தக் கவிதையிலும் பாவிகம் விளங்க வேண்டும்''

என்றும் வலியுறுத்துவார். இப் பகுதிகளை மொழிபெயர்த்துக் கூறும் முனைவர். எஸ். இராமகிருட்டிணன், 'கம்பனும் மில்டனும் ஒரு புதிய பார்வை'' என்ற நூலில், 'பாவிகம்' என்பதனைக் காவியத்தின் அமைப்பு என்றே கருதும் வண்ணம் மொழியாக்கம் செய்ததோடு கவிதையில் உறுப்பழகோடு ஒருமை நலம் விளங்குவதே பாவிகம் என்றும் கூறுவார்.

பாவிகம் என்றால் என்ன? 'பாவம் என்னும் கவித்துவ உணர்வால் எழுவது பாவிகம். இது நூலின் தனிச் செய்யுட்களிலோ பகுதிகளிலோ புலனாவதன்று; தொடக்கம் முதல் முடிவு வரை நூலை முழுமையாக நோக்கும் போதே இப் பண்பு விளங்கும். தேவை இல்லா அம்சத்துக்கு இடம் தராமலும் நிகழ்ச்சியின் பல்வேறு அம்சங்களை இசைவாக இணைத்தும், ஒவ்வோர் அம்சத்தையும் அதற்குரிய இடத்தில் அமைத்தும், பொருளுக்கேற்ற சொல்லாட்சியும், சொல் நடையும் பெற்றும், கவிதை அமைவதில் பாவிகம் வெளிப்படும்'' என்பது காவியாதர்சத்தின் கருத்து. தண்டியலங்கார உரையாசிரியரும் ''அஃது அத் தொடர்நிலைச் செய்யுள் முழுவதும் நோக்கிக் கொள்ளப்படுவதல்லது தனித்து ஒரு பாட்டால் நோக்கிக் கொள்ளப் புலப்படாதது'' என்று கூறுகிறார் தண்டியலங்காரத்தின் பின் தோன்றிய வீரசோழியம்,

''... ... . பாவிகமது நாற்கவியின்
ஒண்பொருளின் தொடர்காப்பிய முற்றி னுரைபெறுமால்'

என்று பாவிக இலக்கணம் கூறும்.

பாவிகம் என்பது காப்பியத்தின் தன்மை என்பதை இலக்கணிகளும் உரைகாரரும் ஆய்வாளரும் ஒத்துக்கொள்கின்றனர் ஆனால் எவ்வாறு இது அமையும் என்று தெளிவாக யாரும் விளக்கிக் கூறவில்லை. நூல் முழுவதும் பாவிகம் எந்த வகையில் காப்பியத்துள் பயின்று வரும் என்று தெளிவுபடக் கூறினாரிலர். Tamil Lexicon-இல் (The basic idea running through a Poem) ''தொடக்கம் முதல் முடிவு வரை வனப்புடையதாக அமையும் காவியப் பண்பு'' என்ற கருத்தினைக் கூறும் வனப்பு என்ற தொல்காப்பியக் கலைச்சொல் Technical term) பயன்படுத்தப்பட்டுள்ளது. வெறும் அழகு

என்ற பொருளைக் குறிக்கப் பயன்படுத்தினாரோ, தொல்காப்பியர் கூறும் எண்வகை வனப்புகளை எண்ணிக் கூறினாரோ என்பதில் தெளிவு இல்லை.

"பாவிகம், ஓரலங்காரம், One of the thirty five figures of languages, moral instruction, inference application & C, from events related in epic poems" என்கிறார் வி. விசுவநாதபிள்ளை (A Tamil - English Dictionary). இவ்வாறு பொருள் கொண்டால், புலவன் தன்னுடைய காப்பியத்துள் இழையோடவிட்டிருக்கும் அறக் கருத்துக்களையும் காப்பியத்தினைக் கற்பதால் நாம் பெறுகின்ற உய்த்துணர்வுகளையும் எவ்வகையில் அவற்றைச் செயற்படுத்தியுள்ளான் என்பதனையும் பாவிகத்தினால் அறியலாம். மேலும், பாவிகம் என்பது காப்பியப் பண்பே என்று காப்பியத்திற்கு மட்டுமே கூறின் அது பெருங்காப்பியத்திற்கும் பொருந்துமா? எவ்வாறாயினும் பாவிகம் என்பது நூல் முழுமையும் ஒப்பு நோக்குவதால் இயைந்திருக்கும் ஒரு நலம் என்ற நிலையில் காண்பதே சிறப்பென்று தோன்றுகின்றது. காப்பியத்தின் கரு எவ்வாறு காப்பியம் முழுவதும் இழையோடி நின்று ஒரு புலவனால் விளக்கப்படுகின்றது என்பதே நாம் இங்கு எண்ணத்தக்கது. புலவனின் நோக்கம் நூல்முழுதும் பதிந்து புலப்படும்; அவ்வாறு புலப்படும் முழுமைத் தன்மையே பாவிகம் என்ற எண்ணத்தை வலியுறுத்தும் வண்ணம் அமைந்துள்ளது தண்டியலங்காரம் காட்டும் சான்று:

"பிறனில் விழைவோர் கிளையொடுங் கெடுப
பொறையிற் சிறந்த கவசமில்லை
வாய்மையிற் கடியதோர் வாளியில்லை"

இப் பாடலின் வாயிலாக இராமாயணக் காப்பியக் கருத்தும் மாபாரதக் கருத்தும், அரிச்சந்திர சரித்திரக் கருத்தும் உணர்த்தப் படுகின்றன. இவ்வெடுத்துக் காட்டுப் பாடலை அடிப்படையாகக் கொண்டுசிலப்பதிகாரக் காப்பியத்தில் அமைந்து கிடக்கும் பாவிகத்தைச் சற்றுச் சிந்திப்போம்.

சிலப்பதிகாரத்தின் பதிகத்தில் வரும்.

"அரைசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற் றாவதூஉம்
உரைசால் பத்தினிக்கு உயர்த்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்"

என்ற மூன்றையும் பாவிகமாகக் கருத இடமிருக்கின்றது. சிலப்பதிகாரத்தின் இம்முத்திறக் கொள்கைகள் நூல் முழுதும் சென்று நிற்றல் ஒருதலை.

"அரசியல் முறையில் தவறு செய்யும் அரசனை அறக்கடவுளே கூற்றுவனாக மாறி அழித்து விடுவான்; பத்தினிப் பெண்டிரை உயர்ந்தோர் போற்றி வழிபடுவர்; ஊழ்வினை, செய்தவரைச் சென்று சேருதல் உறுதி; வேறு பிறவி எடுத்தாலும் ஊழின் வலிமையை மாற்றுதல் இயலாது" என்ற மூன்று அடிப்படைக் கருத்துக்களைச் சிலப்பதிகாரத்தின் மூன்று காண்டங்களிலும் செறிவாகக் கூறியுள்ளார். அவற்றை ஒவ்வொன்றாகக் காண்போம்.

'அரைசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாகும்' என்ற கருத்து மதுரைக் காண்டத்தில் மட்டுமே கூறப்படுகிறது என்பர் சிலர். மதுரை மாநகரத்து வீதியில் சிலம்பை விற்கச் சென்றான் கோவலன். விலங்குநடைச் செலவினையுடைய பொற் கொல்லனை வழியிற் கண்ட கோவலன்,

"காவலன் தேவிக் காவதோர் காற்கணி
நீவிலை யிடுதற் காதியோ"

என்று கூற, அவனும் "அடியேன் அறியேன்" என்று கூறிவிட்டுச் சிலம்பை அவிழ்த்துப் பார்த்துச் சிந்தித்தான். தான் முன்பு திருடிய பாண்டிமாதேவியின் சிலம்பை ஈடுகட்ட இந்தச் சிலம்பைக் காட்டி விடுவேன் என்று மனத்துள் எண்ணிக் கொண்டு பாண்டியனின் அரண்மனை நோக்கிச் சென்றான். ஆனால் பாண்டிய மன்னனோ அரசியின் ஊடலைத் தவிர்க்கும் பொருட்டு மந்திரச் சுற்றம் நீங்கிச் சிலதியர்தம்மொடு கோப்பெருந்தேவி இருக்கும் அந்தப்புரம் நோக்கிச் சென்று கொண்டிருந்தான். அந்த இக்கட்டான சூழ்நிலையில், பொய்வினைக் கொல்லன்,

"காப்புடை வாயிற் கடைக்கண் அகவையின்

கன்னகம் இன்றியும் கவைக்கோல் இன்றியும்
துன்னிய மந்திரம் துணையெனக் கொண்டு
வாயி லாளரை மயக்குதுயி லுறுத்துக்
கோயிற் சிலம்பு கொண்ட கள்வன்''

என் சில்லைலச் சிறுகுடிலகத்து இருக்கின்றான் என்று கூறினான். மன்னவனும்,

''ஊர்காப் பாளரைக் கூவி ஈங்கென்
தாழ்பூங் கோதை தன்காற் சிலம்பு
கன்றிய கள்வன் கைய தாகில்
கொன்றச் சிலம்பு கொணர்க ஈங்கென''

ஆணையிட்டான். சிலம்பு திருடியதாகப் பொற்கொல்லனால் குற்றம் சுமத்தப்பட்டுக் கொலைக்களப்பட்டான் கோவலன். இச்செய்தி ஊரெங்கும் காட்டுத்தீயைப் போலப் பரவுகின்றது. மாதரி வீட்டில் தங்கியிருக்கும் கண்ணகிக்கும் இச்செய்தி எட்டுகிறது. தன் கணவனை இழந்து விட்டோம் என்ற நிலையில் பொங்கி எழுந்தாள்; செங்கண் சிவப்ப அழுதாள்; அழுது அரற்றும்பொழுது,

''மன்பதை அலர்தூற்ற மன்னவன் தவறிழைப்ப
அன்பனை இழந்தேன்யான் அவலங்கொண் டழிவலோ''
''மறனொடு திரியுங்கோல் மன்னவன் தவறிழைப்ப
அறனெனும் மடவோய் யான் அவலங்கொண்டழிவலோ''

என்று கூறுவாள். இக்கூற்றுக்களின் மூலம் இளங்கோ அடிகள் அரைசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாகப் போகின்றது என்பதனை முன் கூட்டியே கூறி விடுகின்றார். வழக்குரை காதையில், கண்ணகி, பாண்டிய மன்னனிடம், தன் நாடும் நகரமும் கூறி ''என்காற் சிலம்பு பகர்தல் வேண்டி நின்பாற் கொலைக்களப்பட்ட கோவலன் மனைவி கண்ணகி'' என்றாள். வேந்தனோ இன்னும் உண்மை உணராதவனாக, தான் செய்தது தவறன்று என்றே எண்ணினான். பின்னும் தன்னுடைய காற்சிலம்பை உடைத்தெறிந்தாள் கண்ணகி. அதன் மூலம் மன்னவன் செய்த தவறினைச் சுட்டிக் காட்டினாள். சிலம்பின் பரல்களைக் கண்ட பாண்டிய மன்னனின் வெற்றியுடைய வெண்கொற்றக் குடை தாழ்ந்தது, செங்கோல் தளர்ச்சியுற்றது; ஆராயாது அவன் செய்த பிழை பெரும் பிழையாயிற்று: பாண்டிமண்டலத்தையே நடுங்க வைத்தது. எனவே,

"பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட
யானோ அரசன் யானே கள்வன்
மன்பதை காக்கும் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது கெடுகஎன் ஆயுள்"

என்று கூறி உயிர் விட்டனன். ஆம்! அரசன் தவறிழைத்தான். கண்ணகிக்கு அறக்கடவுள் உறுதுணையாக நின்று அவனை ஒறுத்தது என்பது இதனால் தெளிவாகின்றதன்றோ! பாண்டியன் தவறிழைத்தமையினால் அறக்கடவுள் ஒறுத்தமை மதுரைக் காண்டத்துள் கூறப்பட்டது. இது பாவிகமானால் பிறகாண்டத்துள்ளும் கூறப்பட்டிருத்தல் வேண்டுமன்றோ!

புகார்க் காண்டத்து இந்திரவிழவூரெடுத்த காதையில் வரும் ஐந்துவகை மன்றங்களில் ஒன்றாகிய 'பாவை மன்றம்' அரைசியல் பிழைத்தோர்க்குரிய அறத்தண்டனை பற்றிப் பேசுகின்றது. அரசனுடைய செங்கோல் சிறிது கோடினாலும் அறங்கூறும் அவையத்தார் நடுவுநிலை நீங்கி ஒருமருங்கு பற்றினும் நாவாற் கூறாது நீருகுத்துக் கண்ணாற் கூறும் பாவை நிற்கும் பாவைமன்றம் சோழநாட்டில் இருந்தமை கூறப்படுவதால் முத்திறக் கொள்கையில் முதற்கொள்கை விளக்கமுறுகின்றது.

வஞ்சிக்காண்டத்தும் அரைசியல் பிழைத்தசெய்தி பயின்று வருகின்றது எனலாம். கனகவிசயர் இருவரும் நா காக்கவில்லை. அதனால் சேரன் செங்குட்டுவனின் வடநாட்டுப் படையெடுப்பு நிகழ்ந்தது. ஆம்! "காவா நாவிற் கனகனும் விசயனும்" என்று கால்கோட் காதையில் வரும் தொடரும் அரைசியல் பிழைத்தமையைக் கூறும். ஆகவே முத்திறக் கொள்கையில் முதற் கொள்கை மூன்று காண்டங்களிலும் இளங்கோவடிகளாரால் கூறப்பட்டுள்ளமை தெளிவு.

இரண்டாவது கோட்பாடு "உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்" என்பதாகும். சிலப்பதிகாரக் காப்பியத் தலைவி கண்ணகியை அறிமுகம் செய்கின்ற போதே, "திருமகளோடும் அருந்ததியோடும்" ஒப்பிட்டுப் பேசுவார். "கண்ணகி நல்லாள்' எனத் தேவந்தி பாராட்டுவாள். காந்தியடிகளுடன், கோவலன், கண்ணகி இருவரும் மதுரை நோக்கிப் புறப்பட்டுவரும் பொழுது கண்ணகியின்

உயர்ந்த பண்புகளை நன்கு அறிந்து கொண்ட காந்தியடிகளே முதன்முதல் கண்ணகியைப் புகழ்கின்றார். துறவு நிலையில் இருக்கும் பெண்ணாகிய கவுந்தியடிகள்

"இன்துணை மகளிர்க்கு இன்றி யமையாக்
கற்புக் கடம்பூண்ட இத்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்"

என்று பாராட்டுவது பத்தினிப் பெண்டிரை உயர்ந்தோர் ஏற்றுகின்ற உயர்பண்புதானே! துன்பமாலையில் கண்ணகி அரற்றிக் காய்கதிர்ச் செல்வனை நோக்கிக் கள்வனோ என் கணவன் என்று கேட்கும் போது,

"கள்வனோ அல்லன் கருங்கயற்கண் மாதராய்
ஒள்ளெரி உண்ணுமிவ் வூரென்ற தொருகுரல்"

என்று தெய்வமாகிய கதிரவன் திருவாய்மலர்தலும் கண்ணகியின் உயர்கற்பினை விளக்குவதற்கே ஆகும்.

மதுரையை எரியூட்டும்போது, எரியங்கி வானவன் "மாபத்தினி" என அழைப்பதும், பெருமனைக் கிழத்தியர் "சிலம்பின் வென்ற சேயிழை" எனக் கூறி ஏத்துவதும், நாடக மடந்தையர்,

"தேரா மன்னனைச் சிலம்பின் வென்றிவ்
வூர்தீ ஊட்டிய ஒரு மகள்"

எனப் பாராட்டுவதும், மதுராபதித்தெய்வம் வந்து நிற்கும் பொழுது 'வீரபத்தினி' என்று நூலாசிரியர் கூறுவதும் தக்க சான்றுகளாகும். கண்ணகி 14-ஆம் நாள் கணவனைக் கூடும்போது, பீடுகெழு நங்கையாகிய கண்ணகியின் பெரும் பெயரை ஏத்திச் சிறப்பித்தனன், அமரர்க்கரசனும் பிறரும் என்பார் இளங்கோவடிகள். குன்றக்குறவர் கண்ணகி வழிபாடு நிகழ்த்துவதும், பத்தினியைப் பாராட்டுவதே ஆகும். மலைவளம் காணச் சென்ற சேரன் செங்குட்டுவனிடத்துக் குன்றக்குறவர் கூறுவதும் சாத்தனார் மதுரையில் கண்ணகிக்கு உற்ற அருந்துயரைக் கூறுவதும் இவண் எண்ணத்தக்கன. மேலும் அவர்கள் "மாபெரும் பத்தினி" எனப் பாராட்டுவர். சேரன் செங்குட்டு-வனின் மனைவி,

"......நம்அகல் நாடடைந்தவிப்
பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்"

என்று புகழ்ந்துரைப்பாள்.

"மடவதின் மாண்ட மாபெரும் பத்தினி"

எனச் சேரன் செங்குட்டுவன் சிறப்பித்துரைத்து வடநாடு நோக்கிப் படைநடைத்திச் சென்று கற்கொண்டு வந்து பத்தினிக் கோட்டம் வகுத்தமையும் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவதற்குரிய தக்க சான்றுகள் ஆகும். சாலினியும்,

"இவளோ
கொங்கச் செல்வி குடமலை யாட்டி
தென்தமிழ்ப் பாவை செய்த தவக்கொழுந்து
ஒருமா மணியாய் உலகிற் கோங்கிய
திருமா மணியெனத் தெய்வ முற்றுரைப்"பாள்.

சேரன் செங்குட்டுவன் பத்தினிக் கோட்டம் அமைத்து விழாவெடுத்த போது, சிறை நீங்கிய கனக விசயரும், மன்னர் பிறரும், குடகக் கொங்கரும், மாளுவ வேந்தரும் இலங்கைக் கயவாகுவும் சேர்ந்து வந்து சேர நாட்டிற் பத்தினியைப் பரவிய செய்தி சிறப்புடைய-தாகுமன்றோ!

"ஊழ்வினை உருத்துவந்தூட்டும்" என்பது மூன்றாவது கருத்-தாகும். சிலப்பதிகாரத்தில் முப்பத்திரண்டு இடங்களில் ஊழ்வினைக் குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. அவை கதை நிகழ்ச்சியை விளக்கும் நிலையில் நேரடியாகப் பயன்பட்டவை, அறிவுரையாக இடம் பெற்-றவை; முன்கதை நிகழ்ச்சியைப் பின்னர் விளக்கும்போது எடுத்து மொழிந்தவை என மூவகை ஆகலாம்.

'யாழிசைமேல் வைத்துத் தன் ஊழ்வினை வந்துருத்ததாகலின்
உவவுற்ற திங்கள் முகத்தாளைக் கவவுக்கை நெகிழ்ந்தனனாய்"

என்று கானல்வரியில் ஊழ் நேரடியாகவே சுட்டப்பட்டுள்ளது.

மேலும் கோவலன் கண்ணகியோடு மதுரை நகருக்குச் சென்றதற்கும், பொற்கொல்லன் கோவலன் கைச்சிலம்பைப் பற்றிப் பாண்டியனிடம் கூறியதற்கும் வேந்தன் கோவலனைக் கொல்ல ஆணையிட்டதற்கும் ஊழே காரணம். கருந்தொழிற் கொல்லன் தான் எண்ணியது முடித்தது என்று இறுமாந்து காவலரைத் தூண்டிட அதனால் கல்லாக் களிமகன் ஒருவன், வெள்வாள் எறிந்து கோவலனைக் கொன்றபோதும், அதனால் காவலன் செங்கோல் வளைந்திடவும் ஊழே காரணமாயிற்று என்கிறார்.

'மண்ணக மடந்தை வான்துயர் கூரக்
காவலன் செங்கோல் வளைஇய வீழ்ந்தனன்
கோவலன் பண்டை ஊழ்வினை உருத்தென்''

என்பார் இளங்கோ. எரியங்கி வானவன் கண்ணகியிடம்,

'மாபத்தினி நின்னை மாணப் பிழைத்த நாள்
பாயெரி இந்தப் பதியூட்டப் பண்டேயோர்
ஏவலு டையேனால்''

எனச் சொல்லும்போதும் ஊழின் நேரடியான ஆற்றல் இங்குச் சுட்டப்பட்டுள்ளது. மேலும் வஞ்சிக்காண்டத்து மாடலன் கூறும் விளக்கத்தின் போதும் இவ்வூழ்வினை எந்த அளவிற்கு உருத்தெழுந்தது என்பதனை வரிசைப்படுத்துவர் இளங்கோவடிகள். கவுந்தியடிகள் கூட ஊழ்வினை உருத்து வந்தமையால் உண்ணா நோன்பிருந்து உயிர்விட்ட செய்தியையும் மாடலன் எடுத்துரைப்பான். தெய்வம் ஏறிய தேவந்திகை பாசண்டச் சாத்தன் வரலாறு கூறும்போது,

''பால்சுரந் தூட்டப் பழவினை உருத்துக்
கூற்றுயிர் கொள்ளைக் குழவிக்கு இரங்கிப்''

பாடுகிடந்தமை பேசப்படுகிறது. இவ்வாறு புகார்க்காண்டத்துக் கானல்வரியில் தொடங்கிய ஊழ் மூன்று காண்டத்துள்ளும் ஊடுருவி நின்று காப்பியத்தை நடத்திச் செல்கின்றது.

நாடுகாண் காதையில் சாரணர் கூற்றாசக் கவுந்தி கூறும் போது,

"ஒழிகென ஒழியாது ஊட்டும் வல்வினை"

என்ற கூற்றும் கவுந்தியின் ஆறுதலுரையாக,

"மறத்துறை நீங்குமின் வல்வினை ஊட்டுமென்று
அறத்துறை மாக்கள் திறத்திற் சாற்றிய"

ஊர்காண்காதையுரையும் ஊழ்வினையின் உச்சத்தை நமக்குக் காட்டி நிற்கும். வஞ்சின மாலையில் கண்ணகி, 'முற்பகற் செய்தான் பிறன் கேடு தன்கேடு பிற்பகற் காண்குறூஉம் பெற்றிய காண்" என்னும் போதும், மதுராபதித் தெய்வம் நெடுஞ்செழியனின் தவறுக்குக் கோவலனுடைய பழைய வினையே காரணம் என்று கண்ணகிகுப் புலப்படுத்தும் போதும், ஊழ்வினையின் உருத்து வந்தூட்டும் ஆற்றல் புலப்படுத்தப்படுதல் காண்க. கணவனை இழந்த நீலியின் சாபமே இன்று கோவலனை வந்து கவ்வியது என்கிறது மதுரைத் தெய்வம். இவ்வாறு சிலப்பதிகாரக் காப்பியத்தின் மூன்றாவது கருத்து, காப்பியம் முழுவதும் பரவிக்கிடக்கின்றது எனலாம். முத்திறக் கொள்கைகள் சிலப்பதிகாரக் காப்பியத்துள்ளே முழுவதும் இழையோடிக் காப்பியத்திற்குச் சிறப்பை உண்டாக்கிப் பாவிகப் பண்பாக நிற்கும் திறத்தை இதுகாறும் கண்டோம்.

வரந்தரு காதை இறுதியில் ஆசிரியர் இளங்கோவடிகளும் இந்தக் காப்பியத்தின் மூலம் மக்களுக்கு அறிவுரை கூறுவார்.

'தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்
பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்
தெய்வந் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின"

என்று எழுதிச் செல்வார். அதைப் பற்றி ந.மு. வேங்கடசாமி நாட்டார் 'காப்பியத்தில் அமைந்த பாவிகங்களையெடுத்து அவர்கட்கு அறிவுறுத்தி வாழ்வீர்; உறுதுணை தேடுமின் என்றார் என்க' என்ற உரை கூறுவார். இவ்வாறு கூறுவதால் இவண் பாவிகம் அறக்கருத்து என்ற வகையில் சிறக்கின்றது. இதேபோன்று நூலினுள் பல இடங்களிலும் அறக்கருத்துக்கள் மொழியப்பட்டுள்ளன.

நீத்தார் நினைவுக்கு அஞ்சலி

அண்மையில் காலஞ் சென்றவரும் கண்ணகி ஆசிரியருமான திரு. சக்திமோகன் நேர்மைசான்ற அரசியல்வாதி. வங்கம் தந்த வீரர் சுபாஷ் சந்திர போஸின் இந்திய தேசிய ராணுவத்தில் சேர்ந்து சிங்கப்பூரில் செய்தி நிருபராகப் பணியாற்றிய சக்திமோகன் அரசியல் வாழ்வில் பற்பல மேடு பள்ளங்களைக் கடந்து வந்தவர். மறவர் குலச் சிங்கமாகவும், ஆன்மீகத் தலைவராகவும் திகழ்ந்த முத்துராமலிங்கத் தேவரின் நெருங்கிய தொண்டனாக இருந்த தோடன்றி, தேவர் தொடங்கி நடத்திய 'நேதாஜி' பத்திரிகையிலும் சக்திமோகன் பணி புரிந்தார். அரசியல் வாதிகளைச் சபலத்திற்கு ஆளாக்கி, கீழ்மைப்படுத்தும் பணமும், பதவியும் சக்திமோகனை அசைக்கமுடியவில்லை. தேவரின் அணியிலிருந்து பிரிக்க முயன்ற சாதீய வெறிகளும் தேசியக் கட்சியொன்றும் தோல்வியைத் தான் சந்தித்தன. அரசியலில் நேர்மையும், நாணயமும் தனது இரு கண்களாகக் கொண்ட இந்த ஏழை அரசியல்வாதி, சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழக மேலவை உறுப்பினராகவும் இருந்தார். தமது கண்ணகி பத்திரிகையின் வழியாகத் தேவரின் குரலையும் ஒலித்ததோடன்றி நேதாஜியின் வாழ்க்கையினையும் அப்பத்திரிகையில் வெளியிட்டு வந்தார். அவர் மறைவால் வருந்தும் அவர் குடும்பத்தினருக்கு நமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

— ஆசிரியர்

நடிகர் முத்துராமன்

தமிழ்த் திரைப்பட உலகில் நவரசத் திலகமாகத் திகழ்ந்த முத்துராமன் அவர்களின் மறைவு அவரது குடும்பத்தாருக்கு மட்டுமல்ல அவரது தொண்டுள்ளத்தில் நம்பிக்கை வைத்திருந்த பல்லாயிரக்கணக்கான முக்குலத்து மக்களுக்கும் அது ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். இனிய பண்பு, அடக்கம், நிறைவான உள்ளம், நேரிய செயல்கள் ஆகியவற்றின் மொத்த உருவமாகத் திகழ்ந்த இத்திரைப்பட நடிகர் கடந்த ஓரிரண்டு ஆண்டுகளில் தான் பிறந்த இனத்திற்கும் இயன்றதைச் செய்ய உறுதி கொண்டு தமிழ் நாடெங்கணும் சுற்றி வந்து நற்பணி புரிந்ததை யாரும் மறக்கமுடியாது.

> குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
> மடிதற்றுத் தான் முந்துறூஉம்

என்ற குறளுக்கு இலக்கணமாகத் திகழ்ந்த இந் நடிகர் திலகம் தஞ்சைக்கு அருகில் ஒரத்த நாட்டில் பிறந்தவர். நாடகத் துறையின் மூலம் படிப்படியாக உயர்ந்து திரைப்பட உலகில் நிலையான ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டவர். ஆர்வமும், துடிப்பும் கொண்ட இந்த நல்ல தமிழ் நடிகரின் மறைவினை எண்ணுந்தொறும் நெஞ்சு நெகிழ்கிறது அவரது வாழ்வும், குறிக்கோளும் நமக்கு வழிகாட்டும் என்பது உறுதி.

— ஆசிரியர்

ஆசிரியர் பக்கம்

அன்புடையீர்!

அகங்களிந்த கைகூப்பு. ஆங்கில ஆண்டு பிறக்கின்ற இத்தருணத்தில், உங்கள் அன்பும், ஆதரவும் நின்று நிலைத்து நீடிக்க வேண்டும் என்ற விழைவோடு செந்தமிழ் உங்களிடம் வருகிறது. புதியன புகுதலும், பழையன கழிதலும் கால வகையினைச் சார்ந்தது என்பர் பவணந்தியார். கவிஞர் கண்ணதாசன், நவரசத் திலகம் முத்துராமன், அரசியல் உலகில் சக்தி மோகன், குமரி மாவட்டத்தைச் சார்ந்த பழம்பெரும்புலவர் இராம சுப்பிரமணிய நாவலர் ஆகியோரின் மறைவால் கண்கலங்கி நிற்கிறோம். நம்மைத் தேற்றுவது போன்ற நற்பெருஞ் செயல்களும் நடந்து கொண்டேயுள்ளன. தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக்கழகம், நாடு தழுவிய பாரதி நூற்றாண்டு விழா ஆகிய இவற்றுக்கெல்லாம் நமது பாராட்டுக்கள்.

தளராத இலக்கியப் பணியினைச் செந்தமிழ் தொடர்ந்து நடத்தும் என்பது உறுதி. ஆங்கிலப் பேராசிரியர் சச்சிதானந்தம் அவர்களின் இலக்கியத்திறனாய்வு பற்றிய கட்டுரை தமிழுலகத்திற்குப் புதியது. இத்தகு கட்டுரைகள் தொடர்ந்து வெளிவரும். சிலப்பதிகாரத்தைப் புதிய கோணத்தில் பார்க்கும் இலக்கிய ஆய்வுக்கட்டுரை ஒன்றும் இவ்விதழில் இடம் பெறுகிறது. அன்பர்கள், தாங்கள் படிப்பதோடு, செந்தமிழ் இதழினைப் பலரும் படிக்கச் செய்யவேண்டும் என்பது எமது வேண்டுகோள். ''தமிழில் ஷேக்ஸ்பியர் இலக்கியத்தில் இமயமலை'' ஆகிய தொடர் கட்டுரைகள் அடுத்த இதழில் இடம் பெறும்.

—ஆசிரியர்

கவியரசர் கண்ணதாசன்

(கவிஞர். இல. வாசுகிநாதன்)

கவிஞர் கண்ணதாசனின் மறைவு இலக்கிய உலகத்திற்கு ஒரு பேரிழப்பாகும். அமெரிக்க மண்ணில் அவர் மறைந்தாலும், அருந்தமிழ் மக்களின், நெஞ்சில் நிறைந்த கவிஞராக இன்றும் திகழ்கிறார். உயிரும் உடம்புமாக அங்குச் சென்ற கவிஞரின், உடலும் மட்டுமே திரும்பி வந்தது. தமிழன்னையின் அருந்தவப் புதல்வனாகத் திரையுலகிலும் சென்று இலக்கிய மணம் வீசச் செய்த கவிஞரின் நினைவுக்கு அஞ்சலியாக இக்கவிதை வெளியாகிறது.

ஆசிரியர்

1. தேன்மழைக் கவிதை யாலே
   திசையெலாம் புகழ் மணந்த
வான்மழைக் கண்ண தாச!
   வையகம் துறந்த் தேனோ
தான்மகிழ் வெய்தினாற் போல்
   தாயகம் மகிழ வைத்தாய்!
தேன்மொழிக் கவிதை வெள்ளம்
   செவியினிற் பாய்வ தென்றோ?

2. பூவையர் சிரிப்பில் தோன்றும்
   போதையும் கலைந்து போகும்
ஆவலாய் அருந்தும் போதை
   பானமோ அறிவை மாய்க்கும்!
காவியச் சுவையில் தோய்ந்த
   கவிஞரே உமது பாடல்
ஓவிய மாகி என்றும்
   உள்ளத்தே உயிரை ஊட்டும்!

3. முத்தமிழ்க் கடலில் மூழ்கி
முத்தினை வாரி அள்ளி
வித்தக வணிகம் செய்யும்
வினைத் திட்பம் பெற்ற தாலே
தத்துவக் கவிஞன் கண்ண
தாசனாய்த் திகழப் பெற்றாய்!
நித்திரை இன்று கொண்டாய்
நித்திரை இழந்தோம் யாமே!

4. தென்றலோ! கவிதை கேட்கத்
தேடியே வந்து மீளும்
மன்றல் சேர் மலர்கள் கண்ணீர்
மழையென மதுவைச் சிந்தும்
வென்றியை இழந்து நிற்கும்
வீரர் போல் ஏங்கி நிற்க
நன்றியில் கூற்றே! கண்ண
தாசரை ஏன்ப றித்தாய்!

5. குயிலினம் வதுவை கண்டால்
குளிர்தமிழ் விரைந்து துள்ளும்!
மயிலினம் ஆடல் கண்டால்
மழைமுகில் கவிதை கொஞ்சும்!
வெயிலையும் குளிர வைக்கும்
விரிதமிழ் பாடும் வேந்தே!
துயிலைநீ கொண்டாய் நெஞ்சத்
தொட்டிலில் குழந்தை ஆனாய்!

6. பிறந்தநம் நாட்டை எண்ணிப்
பெருமிதம் அடைந்தாய்! நல்ல
அறந்திகழ் தமிழர் பண்பின்
அருமையை விளக்கு தற்குப்
பறந்தனை கடல் கடந்து
விரிந்தது தமிழர் மாண்பு!
மறந்துநீ ஆங்கிருந்தே
மண்ணுலகு தன்னை நீத்தாய்!

7. கனிதமிழ் தந்த கம்பன்
கவிநயம் உன்பால் கண்டோம்!
இனிமையும் மகிழ்வும் பெற்றோம்;
இப்புவி தழையக் கண்டோம்;
தனிப் பெரும் கவிஞ! உன்னைத்
தமிழகம் பெற்ற தாலே
தனிப்புகழ் நிலைக்க வைத்தாய்!
தமிழ்மகன் நீயே அன்றோ!

8. தவிக்கின்ற எங்கள் நெஞ்சம்
தன்னிலை காண்பது எப்போ?
குவிக்கின்ற புகழை அள்ளிக்
கோகுலக் கண்ணன் மீது
செவிக்கினித் தருவார் யாரோ?
சிந்தையில் நிலைத்த எங்கள்
கவிக்குயில் கண்ண தாச! நும்மைக்
காண்பது எந்த நாளோ?.

வேண்டுகோள்

செந்தமிழின் வளர்ச்சியில் ஆர்வமும், அன்பும் கொண்டு இதுகாறும் காட்டிய ஆதரவினைத் தொடர்ந்து நல்குமாறு கேட்டுக் கொள்கிறோம். இலக்கிய, இலக்கணத் தொண்டில் செந்தமிழ் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டியது குறித்து, அரிய ஆலோசனைகள் வழங்குவதோடு, வருகிற 1982-ஆம் ஆண்டுக்குரிய சந்தாத் தொகை ரூ. 5/-ஐப் பணவிடை (M.O) யாக அனுப்புமாறு வேண்டிக்கொள்கிறோம்.

54, தமிழ்ச்சங்கச்சாலை
மதுரை—1

ஆசிரியர் — செந்தமிழ்

திருமுறை வழிபாட்டு நிறைவு விழா

சைவத் திருமுறைகளை நாள்தோறும் பயின்று வழிபாடு செய்தவர் ஆண்டவன் அருளைப் பெற்று உய்வதோடு. மனநிறைவும் உளமகிழ்வும் அடைவர் என்பது உறுதி. கூட்டு வழிபாட்டோடு தெய்வத் தமிழின் உயர்வுக்கும் திருநெறியில் நின்று தொண்டாற்று கிறது, குருஞானசம்பந்தர் பணிமன்றம். அதனுடைய 18-ஆவது நிறைவு விழா, தமிழ்ச் சங்கத்தின் சார்பில் நிகழவேண்டும் என்பது தருமை ஆதீனம் 26-வது குருமகா சன்னிதானம் அவர்களின் அருளுள்ளம். அவர்களே நேரிற்போந்து ஆசி வழங்கிய இந்த நிறைவுவிழா, மதுரையம்பதியில் மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத்தில் — திருக்கல்யாண மண்டபத்தில், 28—12—1981 இல் நிகழ்ந்தது. தமிழ்ச்சங்கச் செயலர் திரு. டி. பி. எம். பெரியசாமி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்திய பின்னர், மாண்புமிகு. அமைச்சர் டாக்டர்.காளிமுத்து, திரு. தனுக்கோடி பாண்டியன், திரு. தண்டபாணி ஆகியோர் சிறப்புரை நல்கினர். மாவட்ட நீதிபதி திரு. எம். ஏ. முருகேசன் திருமுறைப் புரவலருக்குப் பாராட்டுரை வழங்கினார். திருப்பாசுரத்தின் உட்கிடக்கை பற்றிய இலக்கியச் சொற்பொழிவுகள் மகாவித்துவான். ச, தண்டபாணி தேசிகர், பேராசிரியர், க. வச்சிரவேல் முதலியார், க வெள்ளைவாரணனார் ஆகியோரால் நிகழ்த்தப்பட்டன பின்னர் இரா. அரங்கசாமி அவர்களின் நன்றியுரையோடு விழா நிறைவுற்றது.

பாராட்டு விழா :

27—12—81 ஆம் நாள் மூவேந்தர் பண்பாட்டுக் கழகத்தின் சார்பில் சோவியத் நாடு சென்று திரும்பிய முன்னாள் சட்டமன்றத் தலைவர் திரு. S. செல்லப்பாண்டியன் அவர்கட்குப் பாராட்டு விழா மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் நிகழ்ந்தது. ஏராளமான நண்பர்களும், அன்பர்களும் குழுமியிருந்த விழாநிகழ்ச்சியில் திரு. செல்லப்பாண்டியன் அவர்கட்கு மதுரை மாநகர் மைய அங்காடித் தலைவர் திரு. பரசுராம் அவர்கள் பொன்னாடை போர்த்திப் பாராட்டினார்கள். திருவாளர்கள், அய்யணன் அம்பலம். கே. கந்த-சாமி, டி. பி. எம். பெரியசாமி, அக்கினிராஜ், கே. எஸ் சந்தானம், மா. தனுக்கோடி பாண்டியன் ஆகியோரும், ஏனைய நண்பர்களும் பாராட்டு வழங்கினர். புலவர். தி. கி. சுந்தரமூர்த்தி அவர்களின் நன்றியுரைக்குப்பின் விழா இனிதே நிறைவுற்றது.

மணியம் பிரஸ்,

44-B, வெங்கடபதி அய்யங்கார் தெரு,

மதுரை-9.